05th
May
2024

www.uthayam.lk
# உதயம்
சமூகங்களின் இருளகற்றும் தனித்துவக் குரல்

உதயம்: 01 இதழ்: 29 பக்கங்கள் - 12 editor.uthayam@gmail.com



# முதலில் பொதுத் தேர்தல் தீவிரமாக ஆராயும் அரசு

## மே தினத்தின் பின் மாறும் கள நிலவரம்

## மொட்டு சின்னத்தில் பொதுஜன பெரமுன

ஒக்டோபர் மாதம் நடைபெற உள்ள ஜனாதிபதி தேர்தலுக்கு முன் பாராளுமன்றத்தை கலைத்து ஜூலை மாதத்தில் பொதுத் தேர்தலை 02ம் பக்கம்பார்க்க...

# O.L. பரீட்சையின் போது ஹிஜாப் அணிய தடையில்லை

### முகம், காதுகள் திறந்தால் போதும்!

நாளை திங்கட்கிழமை ஆரம்பமாகும் கா. பொ.த. சாதாரண தர பரீட்சைக்கு தோற்றும் முஸ்லிம் மாணவிகளுக்கு ஹிஜாபினை அணிந்து பரீட்சைக்கு தோற்றுவதற்கு எவ்வித தடையும் இல்லை என முஸ்லிம் கவுன்சில் 03ம் பக்கம்பார்க்க...

# மே இறுதி வரை அதிகரிக்கும் வெப்பம்

### முன்னெச்சரிக்கையுடன் செயற்பட வேண்டுகோள்!

(ஏ.எம்.ஜலீல்)

நாட்டின் பல பகுதிகளிலும் வெப்பநிலை அதிகரித்திருப்பதையும் அவ்வப்போது மழை பெய்தாலும் இவ்வெப்ப நிலைமை அவ்வாறே நிலவுவதாகவும் 02ம் பக்கம்பார்க்க...

# லண்டன் மேயராக மீண்டும் சாதிக்!

3 வது முறையாக பதவியேற்பு!!



சாதிக் கான் தொடர்ந்து மூன்றாவது முறையாக லண்டன் மேயராக வெற்றி பெற்றார். 03ம் பக்கம்பார்க்க...

# மு.லீ.வாலிப முன்னணியின் ஸ்தாபகர் தின நிகழ்வு

அகில இலங்கை முஸ்லிம் லீக் வாலிப முன்னணிகளின் சம்மேளனத்தின் ஸ்தபாகர் தின நிகழ்வு எதிர்வரும் மே மாதம் 9ஆம் திகதி நடைபெறவுள்ளது.

'Artificial Intelligence, Disinformation, Deep fake and Democracy' எனும் தொனிப்பொருளில் 02ம் பக்கம்பார்க்க...

# கெய்ரோ பேச்சுக்களில் நம்பிக்கை இல்லை

### கை விரிக்கும் ஹமாஸ்

எகிப்தின் தலைநகரம் கைரோவில் நடைபெற்று வருகின்ற சமாதான பேச்சுவார்த்தை தொடர்பில் அமெரிக்காவும் 02ம் பக்கம்பார்க்க...



# நஸீர் அஹமத் ஆளுநராவதற்கு உதவிய புத்தளம் முஸ்லிம்கள்

வடமேல் மாகாணத்தின் ஆளுநராக நசீர் அஹ்மட் தெரிவாவதற்கு புத்தளம் முஸ்லீம்கள் மறைமுகமாக உதவியுள்ளார்கள்.

வடமேல் ஆளுநராக முஸ்லிம் ஒருவரை நியமிப்பதற்கு சில பௌத்த தேரர்கள் எதிர்ப்பு தெரிவித்திருந்த விடயம் 02ம் பக்கம்பார்க்க...

# O.L பரீட்சை நாளை ஆரம்பம்

- சகல ஏற்பாடுகளும் பூர்த்தி
- பரீட்சை ஆணையாளர்

நாளை திங்கட்கிழமை ஆரம்பமாகும் 03ம் பக்கம்பார்க்க...




அமானா வங்கியில்
வாகன நிதியுதவி

உங்கள் வாகனத்துக்குரிய சாவியை
மிகவும் குறைவான மாதாந்த தவணைக்கொடுப்பனவுகளில் பெற்றுக்கொள்ளுங்கள்

ரூ. 2,085/-
ரூ.100,000க்கு வாடகை*

- மிகக்குறைந்த மாதாந்த தவணைக்கட்டணம்
- 7 ஆண்டுகள் வரையான மீள்செலுத்தும் காலம்
- 24 மணித்தியாலத்திற்குள் அங்கீகாரம்

விண்ணப்பிக்க ஸ்கேன் செய்யவும்

அழையுங்கள் 011 7 756 756 | www.amanabank.lk

இது உங்கள் வங்கி Amãna Bank

## கெய்ரா...

**(முன் பக்கத் தொடர்ச்சி)**

இஸ்ரேலும் பெருமளவு நம்பிக்கை வைத்திருந்தாலும் பாலஸ்தீனிய காசா மக்கள் அதன் மேல் நம்பிக்கை வைத்திருப்பதாக தெரியவில்லை குறிப்பாக ஹமாசை பொருத்தமட்டில் அமெரிக்காவும் இஸ்ரேலுடன் இணைந்து போராடும் ஒரு தரப்பாகவே ஹமாஸ் பார்கின்றது அந்த வகையில் அமெரிக்காவினுடைய உளவு நிறுவனம் சி ஐ ஏ முன்வைக்கும் எந்த திட்டமும் ராணுவ ரீதியான மூலோபாயத் திட்டங்களை முதன்மைப்படுத்தியது என்பதாகவே அமெரிக்கா கருதுகின்றது அந்தப் பின்புலத்திலேயே இந்த பேச்சு வார்த்தையை ஹமாஸ் நோக்குகின்றது தற்போது கைரோவில் நடைபெற்று வரும் பேச்சு வார்த்தைகளில் எந்த முன்னேற்றமும் இல்லை என ஹமாஸ் உத்தியோபூர்வமாக அறிவித்துள்ளதோடு ரஷ்யாவும் துருக்கியும் இதற்கு மத்தியஸ்தம் வகிக்க வேண்டும் எனவும் வேண்டுதலை முன்வைத்துள்ளது. இந்தப் பேச்சுவார்த்தைகளில் கத்தாரினுடைய மத்தியஸ்தம் தொடர்ந்து இருக்காது என கத்தார் அறிவித்திருப்பதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவித்துள்ளன குறிப்பாக ஹமாஸ் தனது அரசியல் காரியாளத்தை கத்தாரிலிருந்து துருக்கிக்கு நகர்த்துவது தொடர்பாக கத்தார் அரசாங்கத்துடன் தொடர்ந்து பேச்சு வார்த்தை நடத்திவருகின்றது இந்நிகழ்வின் முக்கியமான நோக்கம் அரபு நாடுகளில் இருந்து கத்தாருக்கு வரும் அழுத்தங்களை குறைக்கவும் சக்தி வாய்ந்த துருக்கியையும் ரஷ்யாவையும் இந்த பிரச்சினைகளுக்கு திட்டமிட்டு கொண்டு வருவதும் ஹமாசின் இலக்காக காணப்படுகின்றது இந்த பேச்சுவார்த்தைகள் முடிவடைகின்ற போது இதனுடைய விளைவுகள் மிகவும் பயங்கரமாக இருக்கும் என்று ராணுவ ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.

## மு.லீ...

**(முன் பக்கத் தொடர்ச்சி)**

கொழும்பு லக்ஷ்மன் கதிர்காமர் நிலையத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பேச்சாளர்களாக ஜனாதிபதி சட்டத்தரணிகளான எம்.எம்.சுஹைர், சாலிய பீரிஸ்,மற்றும் Regional Advisor, Asia Pacific International கலாநிதி ரங்க கலன்சூரிய ஆகியோரும் பங்கேற்கவுள்ளனர்.

அகில இலங்கை முஸ்லிம் லீக் வாலிப முன்னணிகளின் சம்மேளனம் தற்போது 50 வருடங்களை கடந்து தொடர்ந்தும் சேவையாற்றி வருகின்றது.

## மே...

**(முன் பக்கத் தொடர்ச்சி)**

வளிமண்டல திணைக்களம் தெரிவித்துள்ளது.

குறிப்பாக வடக்கு , கிழக்கு , தெற்கு மேல் , சப்பிரகமுவ, மத்திய ஆகிய பகுதிகளில் இவ்வெப்பநிலைமையை அறியமுடிகிறது. இந்நிலைமையினால் என்றுமில்லாதவாறு பலர் உஷ்ணத்தைத் தாங்கிக்கொள்ள முடியாது குறிப்பாக சிறுவர்கள் வயோதிபர்களும் உடலில் தெம்பில்லாத சோர்வு நிலையேற்பட்டு சிரமப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்நிலைமையில் சிறுவர்கள் கடைகளில் விற்கப்படும் இனிப்பூட்டிய "ஐஸ் பழம்" போன்றவற்றை வாங்கி சாப்பிடுவதில் ஆர்வம் காட்டுவதுமுண்டு.

வெப்பம் காரணமாக உடலின் தோலில் அடிக்கடி சொறிவேற்படுவதுடன், வேர்க்குரு போன்றனவும் ஏற்பட்டு தோல் சற்று சிவப்பாக மாறும் நிலைமையுமிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

குழந்தைகளும் இதனால் வழமையைவிட அடிக்கடி அழுவதுமுண்டு. வெப்ப நிலைமையினால் பல வீடுகளில் இந்நிலைமைக்காக மின்விசிறிகளை(குயு) விடியும்வரை உபயோகிக்கும் நிலைமையையும் காணமுடிகிறது. சிலருக்குக் காய்ச்சல் ஏற்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

எதிர்வரும் மே மாத இறுதிவரை இவ்வெப்ப நிலைமை இருக்குமென வளிமண்டல திணைக்களம் தெரிவித்திருக்கும் நிலையில் மக்கள் குறிப்பாக சிறுவர்கள் வயோதிபர்கள் வெயிலின்போது வெளியில் அதிக நேரம் நடமாடுவது வேலைகளில் ஈடுபடுவது, குடைகளின்றி செல்வதைத் தவிர்த்துக் கொள்ளுமாறும், இயன்றவரை நிழலில் இருப்பது நல்லது, அத்துடன் அதிகளவில் நீர் அருந்துவது நீர்க்கலந்த பழரசங்களை அடிக்கடி அருந்துவது சிறந்ததாகுமென வைத்தியர்கள் அறிவுறுத்தியுள்ளதுடன் வித்தியாசமான உடல் உபாதைகள் ஏதும் அறியப்பட்டால் உடன் அருகிலுள்ள வைத்தியசாலைகளுக்குச் சென்று ஏற்ற சிகிச்சைகளைப் பெற்றுக் கொள்ளுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

## நஸீர்....

**(முன் பக்கத் தொடர்ச்சி)**

உயர் மட்டத்தில் பேசப்பட்டது புத்தளம் மாவட்டத்தில் கூடுதலாக முஸ்லிம்கள் இருப்பதனால் இந்த நியமனத்தில் தவறில்லை என்று அங்கு சுட்டிக்காட்டப்பட்டது. முன்பு வடக்கிற்கு சிங்கள ஒருவரை நியமித்தார்கள், மேல் மாகாணத்திற்கு முஸ்லிம் அல்லது தமிழர் ஒருவரை நியமித்தார்கள். நாம் இப்படிச் செய்யவில்லை நாம் வடக்கில் ஆளுநர் மற்றும் அரச அதிபர் பதவிகளை தமிழர்களுக்கே வழங்கி இருக்கின்றோம். மேல் மாகாணத்தில் சிங்கள ஒருவருக்கு வழங்கியுள்ளோம். இத்தீர்மானம் ஜனாதிபதியுடைய தனித்தீர்மானம் அல்ல.

அரசின் வேண்டுகோளையே ஜனாதிபதி நிறைவேற்றியிருக்கின்றார் என்று ஐக்கிய தேசிய கட்சியின் தவிசாளர் வஜிர அபயவர்த்தன இக்கலந்துரையாடலில் தெரிவித்துள்ளார். இதற்கு முன்பு ஏ. ஜே. எம். முஸம்மில் வடமேல் மாகாண ஆளுநராக நியமிக்கப்பட்டிருந்த போது சிறிது காலத்திலேயே அவரை அங்கிருந்து வேறொரு இடத்திற்கு மாற்ற வேண்டிய நிர்பந்தம் அப்போதைய அரசுக்கு ஏற்பட்டது. அதன்படியே அவர் ஊவா மாகாணத்தின் ஆளுநராக நியமிக்கப்பட்டார்.

வடமேல் மாகாணத்தில் குருநாகல் மாவட்டத்தில் பௌத்தர்களுடைய முக்கியமான தளங்கள் இருப்பதன் காரணமாக அதன் பிரதான நிகழ்வுகளில் மாகாண ஆளுநர் கலந்து கொள்ள வேண்டும் அவர் ஒரு சிறுபான்மையாளராக இருந்தால் அதில் பிரச்சினைகள் ஏற்படலாம் என சுட்டிக்காட்டப்பட்டிருந்தது.

## முதலில்...

**(முன் பக்கத் தொடர்ச்சி)**

நடத்துவது குறித்து அரசு தரப்பில் தீவிரமாக ஆராய்ந்து வருவதாக நம்பத் தகுந்த தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் தேசிய மக்கள் சக்தி மே தின கூட்டங்களுக்கு வருகை தந்த மக்கள் தொகையை அடுத்து முதலில் பாராளுமன்ற தேர்தலில் நடத்துவதற்கு தீவிரமாக ஆராய்ந்து வருவதாக தெரிவிக்கப்பட்டது பொதுஜன பெரமுனவின் ஸ்தாபகர் பஸில் ராஜபக்ஷ சில தினங்களுக்கு முன் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க வை சந்தித்து ஜனாதிபதி தேர்தலுக்கு முன் பாராளுமன்ற தேர்தலை நடத்துவதன் அவசியம் பற்றி வலியுறுத்தியுள்ளார். இதற்கு முன்பும் பொதுஜன பெரமுன இக்கோரிக்கையை விடுத்திருந்தது. பொதுஜன பெரமுனவின் ஆதரவை தொடர்ந்தும் பெறுவதற்காக ஜனாதிபதி பொதுத் தேர்தலை நடத்தலாம் என்றும் உருவாகி இருக்கின்ற ஏனைய காரணிகளே வைத்து பொதுத் தேர்தலில் நடத்தலாம் என கூறப்படுகின்றது பொதுத்தேர்தல் நடாத்தப்படுமாயின் பொதுஜன பெரமுன மொட்டு சின்னத்தில் போட்டியிடும் என அதன் முக்கியஸ்தர் ஒருவர் கூறியுள்ளார்.







# கம்பஹா கள்ளிய அலிகார் தேசிய பாடசாலைக்கு ஸ்மார்ட் வகுப்பறை அங்குரார்ப்பணம் செய்து வைத்த சஜித் பிரேமதாச!







**பிரபஞ்சம் தகவல் தொழிநுட்ப வேலைத்திட்டத்தின் கீழ், 170 ஆவது கட்டமாக 10 இலட்சம் ரூபா பெறுமதியான ஸ்மார்ட் வகுப்பறை உபகரணங்கள் கம்பஹா, மீரிகம, அலிகார் தேசிய பாடசாலைக்கு வழங்கி வைக்கும் நிகழ்வு மே 03 ஆம் திகதி இடம்பெற்றது.**

**இதன்போது, பாடசாலையின் நடனம் மற்றும் அரங்கேற்றங்கள் குழுக்களுக்கு ஆடைகள் கொள்வனவு செய்வதற்காக ஒரு இலட்சம் ரூபா பணத்தையும் பாடசாலை அபிவிருத்தி சங்கத்தினரிடம் சஜித் பிரேமதாச வழங்கி வைத்தார்.**

## O/L பரீட்சையின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஸ்ரீலங்கா தெரிவித்துள்ளது. முஸ்லிம் அமைப்புக்களின் கூட்டமைப்பான முஸ்லிம் கவுன்சிலர் ஸ்ரீலங்கா ஹிஜாபினி அணிந்து பரீட்சைக்கு தோற்ற முடியாதென பரவும் வதந்திகளுக்கு முற்றுப்புள்ளி வைத்து இதனை தெரிவித்துள்ளது.

முஸ்லிம் கவுன்சில் சார்பில் அதன் தலைவர் என். எம். அமீன் விடுத்துள்ள அறிக்கையில் இது பற்றி விளக்கப்பட்டுள்ளது. பரீட்சைக்குத் தோற்றும் முஸ்லிம் மாணவிகள் தங்களது முகம் மற்றும் இரு காதுகள் விளங்கும் வகையில் ஹிஜாபினை அணிந்து செல்ல வேண்டும் என பரீட்சை திணைக்களம் விடுத்துள்ள சுற்றுநிருபத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

பரீட்சைக்கு தோற்றும் முஸ்லிம் மாணவிகளிடம் ஹிஜாபினை அகற்றிச் செல்ல வேண்டும் என பரப்பப்படும் வதந்திகளில் உண்மை இல்லை எனவும் ஹிஜாப் அணிந்து செல்வோர் முகம் மற்றும் காதுகள் விளங்கும் வகையில் ஹிஜாப் அணிந்த செல்வது போதுமானது எனவும் பரீட்சை திணைக்களமும், கல்வி அமைச்சும் உறுதிப்படுத்தியிருப்பதாக முஸ்லிம் கவுன்சில் தலைவர் என். எம். அமீன் இரு தொடர்பாக விடுத்துள்ள அறிக்கையிலே தெரிவித்துள்ளார். ஹிஜாபினை அணிந்து செல்வோர் எவ்வித அச்சமும் இன்றி இந்த ஆலோசனைகளை பின்பற்றி பரீட்சை மண்டபத்திற்கு செல்லுமாறு கேட்கப்படுகிறார்கள்.

ஆசிரியர்களும் பெற்றோர்களும் பரீட்சைக்கு தோற்றும் மாணவிகளுக்கு இது தொடர்பான ஆலோசனைகளை வழங்கி பரீட்சை நிலையங்களுக்கு அனுப்பி வைக்குமாறும் வேண்டப்படுகிறீர்கள்.

சில சக்திகள் பரீட்சைக்கு முதலாவதாக தோற்றம் மாணவிகள் மத்தியிலே பிரச்சனைகளை தோற்றுவதற்காக இவ்வாறான வதந்திகளை பரப்புகின்றனரா என்ற சந்தேகம் ஏற்பட்டுள்ளது. எனவே இப்போலி வதந்திகளை நம்பாமல் துணிச்சலோடு பரிட்சைக்கு தோற்றுமாறு சகல முஸ்லிம் மாணவிகளையும் கேட்டுக்கொள்கிறோம். பரீட்சைக்கு தோற்றும் சகல மாணவ மாணவிகளுக்கும் எமது நல்வாழ்த்துக்களினையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

## லண்டன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எதிர் போட்டியாளரான ஹாலின் 33மூ வாக்குகளுடன் ஒப்பிடுகையில், தற்போதைய மேயர் சாதிக் கான் 44மூ வாக்குகளைப் பெற்றார்,

ஊகங்கள் ஹால் வெற்றி பெறக்கூடும் என்று கூறினாலும், தலைநகரின் பல்வேறு தொகுதிகளில் கானின் திடமான செயல்திறன் அவரது நிலையை உறுதிப்படுத்தியது.

தேர்தல் பிரச்சாரம் முழுவதும், குறிப்பாக கன்சர்வேடிவ் ஆதரவு பாரம்பரியமாக ஆதிக்கம் செலுத்தும் வெளி நகரங்களில், வாக்காளர்களின் எண்ணிக்கையைச் சுற்றி எதிர்பார்ப்பு இருந்தது.

இருப்பினும், பரந்த அளவிலான மக்கள் தொகையில் ஆதரவைத் திரட்டும் கானின் திறன், அவரது தீர்க்கமான வெற்றியைப் பெறுவதில் முக்கியமானது.

பாகிஸ்தானில் இருந்து குடியேறிய பெற்றோருக்கு பிறந்த அவர், கவுன்சிலுக்கு சொந்தமான குடியிருப்பில் வளர்ந்தார், அவரது தந்தை பஸ் டிரைவராக பணிபுரிந்தார்.

வடக்கு லண்டன் பல்கலைக்கழகத்தில் சட்டம் படித்த பிறகு, கான் மனித உரிமைகள் சட்டத்தில் நிபுணத்துவம் பெற்ற வழக்கறிஞராக ஒரு தொழிலைத் தொடங்கினார். கானின் அரசியல் வாழ்க்கை 1994 இல் தொடங்கியது, லண்டன் பெருநகரமான டூட்டிங்கில் உள்ளூர் தொழிலாளர் கட்சி கவுன்சிலராக அவர் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

## O/L பரீட்சை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கா. பொ.த. சாதாரண தர பரீட்சைக்கு தோற்றும் முஸ்லிம் மாணவிகளுக்கு ஹிஜாபினை அணிந்து பரீட்சைக்கு தோற்றுவதற்கு எவ்வித தடையும் இல்லை என முஸ்லிம் கவுன்சிலர் ஸ்ரீலங்கா தெரிவித்துள்ளது. முஸ்லிம் அமைப்புக்களின் கூட்டமைப்பான முஸ்லிம் கவுன்சிலர் ஸ்ரீலங்கா ஹிஜாபினி அணிந்து பரீட்சைக்கு தோற்ற முடியாதென பரவும் வதந்திகளுக்கு முற்றுப்புள்ளி வைத்து இதனை தெரிவித்துள்ளது. முஸ்லிம் கவுன்சில் சார்பில் அதன் தலைவர் என். எம். அமீன் அவர்கள் விடுத்துள்ள அறிக்கையில் இது பற்றி விளக்கப்பட்டுள்ளது. பரீட்சைக்குத் தோற்றும் முஸ்லிம் மாணவிகள் தங்களது முகம் மற்றும் இரு காதுகள் விளங்கும் வகையில் ஹிஜாபினை அணிந்து செல்ல வேண்டும் என பரீட்சை திணைக்களம் விடுத்துள்ள சுற்றுநிருபத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. பரீட்சைக்கு தோற்றும் முஸ்லிம் மாணவிகளிடம் ஹிஜாபினை அகற்றிச் செல்ல வேண்டும் என பரப்பப்படும் வதந்திகளில் உண்மை இல்லை எனவும் ஹிஜாப் அணிந்து செல்வோர் முகம் மற்றும் காதுகள் விளங்கும் வகையில் ஹிஜாப் அணிந்த செல்வது போதுமானது எனவும் பரீட்சை திணைக்களமும், கல்வி அமைச்சும் உறுதிப்படுத்தியிருப்பதாக முஸ்லிம் கவுன்சில் தலைவர் என். எம். அமீன் இரு தொடர்பாக விடுத்துள்ள அறிக்கையிலே தெரிவித்துள்ளார். ஹிஜாபினை அணிந்து செல்வோர் எவ்வித அச்சமும் இன்றி இந்த ஆலோசனைகளை பின்பற்றி பரீட்சை மண்டபத்திற்கு செல்லுமாறு கேட்கப்படுகிறார்கள். ஆசிரியர்களும் பெற்றோர்களும் பரீட்சைக்கு தோற்றும் மாணவிகளுக்கு இது தொடர்பான ஆலோசனைகளை வழங்கி பரீட்சை நிலையங்களுக்கு அனுப்பி வைக்குமாறும் வேண்டப்படுகிறீர்கள். சில சக்திகள் பரீட்சைக்கு முதலாவதாக தோற்றம் மாணவிகள் மத்தியிலே பிரச்சனைகளை தோற்றுவதற்காக இவ்வாறான வதந்திகளை பரப்புகின்றனரா என்ற சந்தேகம் ஏற்பட்டுள்ளது. எனவே இப்போலி வதந்திகளை நம்பாமல் துணிச்சலோடு பரிட்சைக்கு தோற்றுமாறு சகல முஸ்லிம் மாணவிகளையும் கேட்டுக்கொள்கிறோம். பரீட்சைக்கு தோற்றும் சகல மாணவ மாணவிகளுக்கும் எமது நல்வாழ்த்துக்களினையும் தெரிவித்துக் கொள்கிறோம்.



www.uthayam.lk
உதயம்
சமூகங்களின் இருளகற்றும் தனித்துவக் குரல்
2024 MAY 06 - SUNDAY
WEB: www.uthayam.lk
E-mail: editor.uthayam@gmail.com
FB ID: உதயம்

# கேள்விக்குறியாகும் காதி நீதி மன்றங்கள்

முஸ்லிம்சமூகத்தின்குடும்பப்பிரச்சினைகளுக்குதீர்வுபெற்றுக் கொடுப்பதற்காக முஸ்லிம்களுக்கு என்றே உருவாக்கப்பட்டதே காதி நீதிமன்றங்கள். நாட்டில் 65 காதி நீதிமன்றங்கள் இயங்கி வருகின்றன. முஸ்லிம் விவாக விவாகரத்துச் சட்டம் இக் காதி நீதிமன்றங்கள் ஊடாக அமல்படுத்தப்பட்டு வருகின்றது.

ஆனால் அண்மைக்காலமாக இக் காதி நீதிமன்றங்களுக்கு எதிராக பல்வேறு குற்றச்சாட்டுகள் முஸ்லிம் சமூகத்தில் இருந்தே முன்வைக்கப்பட்டு வருகின்றது.

நாட்டில் அமுலில் இருக்கும் முஸ்லிம் விவாக விவாகரத்துச் சட்டம் திருத்தங்களுக்குட்படுத்த வேண்டும் என பல தசாப்த காலமாக குரல் எழுப்பப்பட்டு வருகிறது. குறிப்பாக முஸ்லிம் பெண் அமைப்புகள் சில தங்களுக்கு காதி நீதிமன்றங்களில் அநீதி இழைக்கப்பட்டு வருகின்றது.

முஸ்லிம் பெண்கள் சிறுவயதிலேயே காதி நீதவான்களின் அனுமதியுடன் திருமணம் செய்து வைக்கப்படுகின்றார்கள். இதனால் முஸ்லிம் சமூகம் கல்வி மற்றும் பொருளாதார நிலைகளில் பின்தள்ளப்பட்டு வருகின்றது என பெண்கள் அமைப்புகள் இக்கட்டத்தில் திருத்தங்களுக்காக போர் கொடி தூக்கியுள்ளனர். முஸ்லிம் விவாக விவாகரத்துச் சட்டத்தில் திருத்தங்களை சிபாரிசு செய்வதற்காக 2009ம் ஆண்டு அப்போதைய நீதி அமைச்சர்கள் அமைச்சர் மிலிந்த மொரகொடவினால் நீதியரசர், சலீம் மர்தூப் தலைமையில் நியமிக்கப்பட்ட குழுவின் சிபாரிசுகள் கூட பல்வேறு அழுத்தங்களுக்கு உட்படுத்தப்பட்டு விவாதிக்கப்பட்டு வந்தமையை நாம் அறிவோம்.

முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்கள் கூட இச்சிபாரிசுகளில் கருத்து முரண்பட்டு கொண்டனர். இச்சிபாரிசுகலாள் முன்னாள் நீதி அமைச்சர்கள் தலதா அத்துகோரலை, அலி சப்ரி, விஜயதாச ராஜபக்ஷ என்பவர்களுக்கு இடையில் மாறி மாறி வளம் வந்தன. தற்போதைய நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்சவின் பொறுப்பிலேயே தற்போது சிபாரிசுகள் தஞ்சம் அடைந்துள்ளன முஸ்லிம் விவாக விவாகரத்து சட்டத்துக்கு என்ன நடக்கப்போகிறது? காதிநீதிமன்ற கட்டமைப்பு இடித்து தள்ளப்படுமா? முஸ்லிம் சமூகம் அச்சத்தில் மூழ்கியுள்ளது ஒரே நாடு ஒரே சட்டம் என்ற கோத்தாவின் எண்ணக்கரு அல்லாஹ்வின் அருளால் தடை செய்யப்பட்டதனால்.

காதி நீதிமன்றங்கள் தொடர்ந்து செயல்பட்டு வருகின்றன. இதே வேளை அண்மைக்காலமாக காதி நீதவான்களின் ஊழல் செயற்பாடுகள் இக்கட்டமைப்பு தொடர்பில் முஸ்லிம்களுக்கிடையில் அதிருப்தியை ஏற்படுத்தி உள்ளன. ஊழல் குற்றச்சாட்டு தொடர்பில் ஒன்றன்பின் ஒன்றாக காதி நீதவான்கள் இலஞ்ச ஊழல் ஆணை குழுவினால் கையும் களவுமாக கைது செய்யப்பட்டு விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளார்கள். இறுதியாக புத்தளம் காதி நீதவான் கைது செய்யப்பட்டு எதிர்வரும் ஆறாம் திகதி வரை விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

இவ்வாறான நிலையில் காதி நீதிமன்ற கட்டமைப்பு தொடர்ந்து பாதுகாக்கப்படும் என்ற சந்தேகம் ஏற்பட்டுள்ளது. இக்கட்டமைப்பினை பாதுகாக்க அரசாங்கம் ஒரே நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும்.

காதி நீதிபதிகளுக்கு உரிய சம்பளம், உரிய வளங்கள் வழங்கப்பட வேண்டும் இக்கட்டமைப்பை பாதுகாத்துக் கொள்ள வேண்டியது பணியில் இருக்கும் காதி நீதிபதிகளின் பொறுப்பாகும் அவர்கள் சமூக உணர்வுடன் நேர்மையாக பணியாற்ற வேண்டும் இப்பணியினை இலாபமீட்டும் தொழிலாக மாற்றிக் கொள்ளக் கூடாது என்பதே சமூகத்தினதும் எமதும் நிலைப்பாடாகும்.

# முஸ்லிம் வாலிபர் சங்கப் பேரவையின் ஸ்தாபகர் ஞாபகார்த்த நிகழ்வு







(ஏ.எஸ்.எம்.ஜாவித்)

அகில இலங்கை முஸ்லிம் வாலிபர் சங்கப் பேரவையின் ஸ்தாபகர் கலாநிதி ஏ.எம்.ஏ. அஸீசின் ஞாபகார்த்த நிகழ்வு பேரவையின் தேசியத் தவர் இஹ்ஸான் ஹமீட் தலைமையில் அண்மையில் தெமடகொடயில் அமைந்துள்ள வை.எம்.எம்.ஏ பேரவையின் தலைமைக் காரியாலயத்தில் இடம் பெற்றது.

இதன்போது பேரவையின் புதிய லாஞ்னை பொறிக்கப்பட்ட ரீ சேர்ட் அறிமுகப்படுத்தப்பட்டதுடன் ஞாபகார்த்த நினைவாக கேக் வெட்டி நிகழ்வுகள் ஆரம்பிக்கப்பட்டன.

வரவேற்புரையை தேசியத் தலைவர் இஹ்ஸான் ஹமீட் வழங்கினார் ஏ.எம்.ஏ.அஸீஸ் தொடர்பான அறிமுக உரையை முன்னாள் தலைவர் காலித் எம் பாறுக் வழங்கினார்.

இந்நிகழ்வில் கலாநிதி அஸ ீசின் புதல்வர்களான அலி அஸீஸ், காலநிதி அஸீஸ் ஆகியோருடன் பேரவையின் தேசிய பொதுச் செயலாளர் ஆசிப் சுக்ரி பொருலாளர் உள்ளிட்ட உறுப்பினர்களும் மாவட்ட ரீதியிலான தலைவர்கள் உள்ளிட்ட உறுப்பினர்கள் முன்னாள் தலைவர்களும் கலந்து கொண்டிருந்தனர்.

பேரவையின் நிறுவுனரின் ஞாபகார்த்தமாக சுய தொழில் ஈடுபடும் தேவையுடைய ஒருவருக்கு நடமாடும் வியாபார வண்டி ஒன்றும் வழங்கி வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இதன்போது துஆ பிரார்த்தனையை மௌலவி முஜீப் நிகழ்த்தினார்.




# வடமேல் மாகாண ஆளுநர் நஸீர் அஹமட் ஏறாவூர் முதலீட்டு வலயத்தின் அபிவிருத்திப் பணிகள் குறித்து இந்திய முதலீட்டாளர்களுடன் நேரில் சென்று பரிசீலனை







(ஏ.எச்.ஏ. ஹுசைன்)

மட்டக்களப்பு மாவட்டம் – ஏறாவூர் புன்னைக்குடா கடற்கரையோரமாக அமையவிருக்கும் ஆடைத் தொழில் முதலீட்டு வலய அபிவிருத்திப் பணிகளின் முன்னேற்றம் குறித்து கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சரும் தற்போதைய வடமேல் மாகாண ஆளுநருமான செய்னுலாப்தீன் ஆலிம் நஸீர் அஹமட் இந்திய முதலீட்டாளர்களுடன் சென்று பார்வையிட்டார்.

சனிக்கிழமை 04.05.2024 கொழும்பிலிருந்து மட்டக்களப்புக்கு விமானம் மூலம் வருகைதந்த வடமேல் மாகாண ஆளுநர் நஸீர் அஹமட்டும் இந்திய முதலீட்டாளர் குழுவினரும் சுமார் 400 ஏக்கர் நிலப்பரப்பில் அமையவிருக்கும் முதலீட்டு வலயத்தின் அபிவிருத்திப் பணிகள் குறித்து நேரில் சென்று ஆராய்ந்தனர்.

ஏறாவூரில் ஆடைக் கைத்தொழில் முதலீட்டு வலயம் அமைப்பதற்கு கடந்த 26.10.2020 அன்று அமைச்சரவைத் தீர்மானம் எட்டப்பட்டதற்கு அமைவாக புன்னைக்குடா கடற்கரையோரப் பகுதியில் ஆடைக் கைத்தொழில் முதலீட்டு வலயம் அமைப்பதற்கான அபிவிருத்திப் பணிகள் இடம்பெற்று வருகின்றன.

இது கிழக்கு மாகாணத்தில் துணி உற்பத்தி தொடர்பான தொழில் முயற்சிக்கென அமையவிருக்கும் விஷேட, பிரமாண்ட கைத்தொழில் வலயமாகும்.

இந்த ஆடைக் கைத்தொழில் முதலீட்டு வலயம் இயங்கத் துவங்குமாயின் அங்கு பல்வேறு தொழிற் தரங்களில் சுமார் ஈராயிரம் பேர் நேரடியாகவும் சுமார் அதே எண்ணிக்கையிலானோர் மறைமுகமாகவும் தொழில் வாய்ப்பைப் பெறுவர் என்று எதிர்பார்க்கப்படுவதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

முதலீட்டு வலயத்திற்கென சிபார்சு செய்யப்பட்ட 400 ஏக்கர் காணிகளில் காணி மறுசீரமைப்பு ஆணைக்குழவுக்கு உரித்தான 275 ஏக்கர் காணிகள் ஏற்கெனவே இலங்கை முதலீட்டுச் சபைக்கு வழங்கப்பட்டு அங்கு மின்சாரம், நீர் விநியோகம், வீதிகள், தொலைத் தொடர்பு உள்ளிட்ட உள் கட்டமைப்புப் பணிகள் செய்து முடிக்கப்பட்டுள்ளன.

கொரோனா வைரஸ் தொற்று மற்றும் பொருளாதார நெருக்கடி முடக்கம் காரணமாக இந்த முதலீட்டு வலயத்திற்கான அபிவிருத்திப் பணிகள் தாமதமாகியிருக்கின்ற போதிலும் வெகுவிரைவில் துரித கதியில் அபிவிருத்திப் பணிகள் முன்னெடுக்கப்பட்டு முதலீட்டு வலயம் செயல்படத் துவங்கும் என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

இதேவேளை, ஆளுநருடன் வந்த இந்திய ஆடை உற்பத்தி முதலீட்டாளர்கள் மட்டக்களப்பு மாவட்டத்தின் கல்குடாத் தொகுதியில் பாரிய ஆடைத் தொழிற்சாலைகளை நிர்மாணிக்க தாம் ஆர்வமாக இருப்பதாகத் தெரிவித்தனர்.

அதன் மூலம் வறிய நிலையிலுள்ள பல நூற்றுக்கணக்கான இளைஞர் யுவதிகள் வேலை வாய்ப்பைப் பெறுவர் என்றும் அவர்கள் நம்பிக்கை வெளியிட்டனர்.

வடமேல் மாகாண ஆளுநர் நஸீர் அஹமட் உடன் வருகை தந்த இந்திய முதலீட்டாளர்கள் குழுவில், தமிழ் நாட்டின் முன்னோடி ஆடையுற்பத்தி நிறுவனமான எஸ்பி அப்பரல்ஸ் லிமிட்டெட்டின் நிருவாகப் பணிப்பாளர் பி. சுந்தர்ராஜன், பிரதம நிறைவேற்று அதிகாரி பி.வி. ஜீவா, தலைமை கணக்காளர் வி. பாலாஜி, எஸ்பி யூகே நிறுவனத்தின் இலங்கைக்கான தலைமை அதிகாரி பிரசங்க ஹேவாபத்திரன ஆகியோர் இடம்பெற்றிருந்தனர்.

# “பகிர்வதற்கு முன் சிந்தியுங்கள்” ஊடக செயலமர்வு





(எம்.பஹத் ஜுனைட்)

காத்தான்குடி சுயாதீன ஊடகவியலாளர் போரத்தின் ஏற்பாட்டில் ”பகிர்வதற்கு முன் சிந்தியுங்கள்” எனும் தொனிப்பொருளிலான ஊடக செயலமர்வு சனிக்கிழமை (04) காத்தான்குடி பள்ளிவாயல் முஸ்லிம் நிறுவனங்களின் சமேளனத்தின் செய்/ஹல் பலாஹ் கல்வி நிலையத்தின் கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

சுயாதீன ஊடகவியலாளர் போரத்தின் தலைவர் எம்.எச்.எம். அன்வர் தலைமையில் இடம்பெற்ற ஊடக செயலமர்வில் விடிவெள்ளி பத்திரிகையின் பிரதம ஆசிரியர் எம்.பீ.எம்.பைறூஸ் வளவாளராக கலந்துகொண்டு சமூக வலைதள பாவனை மற்றும் போலி செய்திகளை இனங்காணல்,பாதுகாப்பு, சமூகவலைத்தள பாவனையின் போது முகம் கொடுக்கும் பிரச்சினைகள் என பல்வேறு தலைப்புக்களில் விரிவுரையாற்றினார்.

இவ் ஊடக செயலமர்வில் சிரேஷ்ட ஊடகவியலாளர்கள்,இளம் ஊடகவியலாளர்கள் மற்றும் பாடசாலை மாணவர்கள் என பலர் கலந்து கொண்டதுடன் நிகழ்வின் இறுதியில் அதிதிகளால் சான்றிதழும் வழங்கி வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# அபுஹர் முஹம்மது அஸ்பர் சட்டத்தரணியாக சத்தியப்பிரமாணம்

(அரபாத் பஹர்தீன்)



கல்பிட்டி பிரதேசத்தைச் சேர்ந்த அபுஹர் முஹம்மது அஸ்பர் சட்டத்தரணியான உயர் நீதிமன்ற நீதியரசர்கள் முன்னிலையில் சத்தியப்பிரமானம் செய்து கொண்டார்.

கல்பிட்டி அல் அக்ஸா தேசிய பாடசாலையின் பழைய மாணவரான இவர் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் புத்தளமாவட்ட முன்னாள் திட்டமிடல் உதவியாளராக கடமையாற்றியிருந்தார்.

மேலும் இலங்கை பேராதனை பல்கலைக் கழகத்தின் கலைத்துறைப் பட்டதாரிப் பட்டத்தினையும், சட்டமானிப் பட்டத்தையும் பெற்றுக் கொண்ட இவர், இப் பிரதேசத்தின் பல்வேறு அமைப்புக்களின் முக்கிய பதவியினை வகிந்து வருகின்றதுடன் பல்வேறு சமூக சேவைகளிலும் ஈடுபட்டு வருகின்றமை சுட்டிக்காட்டத்தக்கது.

மன்னார் எருக்கலம்பிட்டியைப் பிறப்பிடமாகக் கொண்ட மர்ஹூம் அபுஹர் மற்றும் தலைமன்னாரைப் பிறப்பிடமாகக் கொண்ட ஹசீனா தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வர் இவர் என்பது குறிப்பிடத்தக்கது.


INTERNATIONALLY RECOGNIZED PROGRAMS

DIPLOMA PROGRAMS

TVEC REGISTERED INSTITUTE

- Counseling & Psychology
- Teacher Training
- Business Management
- Spoken English
- AMI Montessori
- Child Psychology
- IT Programs

CALL US FOR MORE DETAILS
0765204604 | 0778877907

Awarded By: INTERNATIONAL PROFESSIONAL ACADEMY, UK
www.ipauk.org.uk

HND (UK) PROGRAMS

- HND (UK) in Business Management
- HND (UK) in Computing
- HND (UK) in Teacher Training
- HND (UK) in Psychology
- HND (UK) in English

CALL US FOR MORE DETAILS
0772703004 | 0767727032

TOP UP DEGREE PROGRAMS

UGC APPROVED

- Bachelors in Psychology
- Bachelor of Education
- BBA / MBA
- BA in English
- BSC IT

CALL US FOR MORE DETAILS
0765204604 | 0767727032

AMAZON COLLEGE
Where Success Begins
294, 2nd Floor, Galle Road, Colombo 04, Sri Lanka
+94114 386 126 | info@amazoncollege.lk
/amazoncollegelk | www.amazoncollege.lk

# ஈஸ்டர் தாக்குதலில் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு அரசாங்க வீடுகள்

## அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவிப்பு

(முனீரா அபூபக்கர்)

ஈஸ்டர் தாக்குதலில் பாதிக்கப்பட்ட 223 குடும்பங்களுக்கு வீடுகள் அமைக்கப்பட்டு வழங்கப்பட்டுள்ளது என்று நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

223 குடும்பங்களுக்கான வீடுகளை நிர்மாணிப்பதற்காக அரசாங்கம் 139 மில்லியன் ரூபாவை செலவிட்டுள்ளது. காணியுடன் கூடிய புதிய வீடு கட்டுதல், வீடுகளை புனரமைப்பு செய்தல் போன்ற பணிகள் இதன் கீழ் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இத்திட்டத்தின் கீழ் கம்பஹா கட்டுவாப்பிட்டிய தேவாலயத்தை அண்மித்த பகுதிகளில் அதிகளவான குடும்பங்களுக்கு வீடுகள் வழங்கப்பட்டுள்ளன. கட்டுவாபிட்டிய தேவாலயத்துடன் தொடர்புடைய 144 குடும்பங்களுக்கும், கொச்சிக்கடை தேவாலயம் தொடர்புடைய 09 குடும்பங்களுக்கும், மட்டக்களப்பு மாவட்டத்தில் ஈஸ்டர் தாக்குதலில் பாதிக்கப்பட்ட 70 குடும்பங்களுக்கும் வீடுகள் நிர்மாணிக்கப்பட்டுள்ளன.

இத்திட்டத்தின் இரண்டாம் கட்டத்தின் கீழ் 11 வீடுகளுக்கு 5 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டதோடு, வீடமைப்புத் திட்டத்தை விரைவாக முடிக்குமாறும் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபைக்கு பணிப்புரை விடுத்துள்ளதாக அமைச்சர் பிரசன்ன ரணதுங்க குறிப்பிட்டார்.



இதேவேளை, ஈஸ்டர் தினத்தன்று தாக்குதலுக்கு உள்ளான கட்டுவாப்பிட்டி தேவாலயத்திற்கு அரசாங்கம் புதிய ஞாயிறு அறநெறிப் பாடசாலை கட்டிடத்தையும் 13 கோடி ரூபா செலவில் நிர்மாணித்து கொடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ரணசிங்க பிரேமதாசாவின் 31வது சிரார்த்த தின நிகழ்வு

(ஏ.எஸ்.எம்.ஜாவித்)

மறைந்த முன்னாள் ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாசாவின் 31 வது சிரார்த்த தின நிகழ்வு அண்மையில் கொழும்பு 12 புதுக்கடை வளாகத்தில் அமைந்துள்ள அவரது உருவச் சிலைக்கு அருகில் பிரேமதாசா வின் புதல்வரும் எதிர்க்கட்சித் தலைவருமான சஜித் பிரேமதாசா தலைமையில் இடம் பெற்றது.

இதன் போது அவரது குடும்ப உறுப்பினர்கள் பாராளுமன்ற உறுப்பினர்கள் கட்சித் தொண்டர்கள் மதத் தலைவர்கள் பொதுமக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

நான்கு மத சமயத் தலைவர்களின் சமயப் பிரார்த்தனைகளுடன் நிகழ்வுகள் ஆரம்பமாகியதுடன், சஜித் பிரேமதாஸ அவரது தந்தை மக்களுக்கு ஆற்றிய சேவைகள் அவரின் அரசியல் செயற்பாடுகள் மக்களுடன் அவர் கொண்டிருந்தன நல்லுறவுகள் தொர்பாகவும் உரையாற்றினார்.

இதன் போது மறைந்த முன்னாள் ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாசாவின் உருவச் சிலைக்கு முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரகுமான் உள்ளிட்டவர்களால் மலர் மாலை அனுவிக்கப்பட்டதுடன் திருமதி பிரேமதாசா உள்ளிட்ட குடும்ப உறுப்பினர்களாலும் பாராளுமன்ற உறுப்பினர்கள் உள்ளிட்ட ஏனைய பிரமுகர்களாலும் சிலைக்கு மலர் வைத்து அஞ்சலி செலுத்தியமை குறிப்பிடத்தக்கது.

# "தமிழ் விதை" முன்பள்ளி பாட நூல் வெளியீடு



(ஐ.ஏ. காதிர் கான் )

குரவரசந டுநயனநச"ள முன் பள்ளியில் தமிழ் மொழி மாணவர்களுக்காக "தமிழ் விதை" பாட நூல், முதன் முதலாக பாடசாலை அதிபர் லைலா அக்ஷ ியாவினால் அண்மையில் (30) ஹொரேதுடுவை முஸ்லிம் மகா வித்தியாலயத்தில் வெளியிட்டு வைக்கப்பட்டது.

இதன் போது வித்தியாலய அதிபர் எஸ்.எச். முத்தலிப் கரங்களால், மாணவர்களில் சிலர் நூல்களைப் பெற்றுக் கொண்டனர்.

இச்சிறப்பு நூல் வெளியீட்டு நிகழ்வில், முன்பள்ளி அதிபர் லைலா அக்ஷியா, பிரதியாசிரியர் நஸ்ரா பானு பெற்றோர்கள், நலன்விரும்பிகள் எனப் பலரும் பங்கேற்றிருந்தனர்.

# அப்ரார் கல்வி அபிவிருத்தி நிலையத்தின் விசேட கூட்டம்



(பீ.எம்.முக்தார்)

பேருவளை அப்ரார் கல்வி அபிவிருத்தி நிலையத்தின் விசேட கூட்டம் மருதானை அரப் வீதியில் உள்ள எம்.நிஸாம் ஹாஜியாரின் இல்லத்தில் நடைபெற்றது.

பிரதேசத்தில் உள்ள பாடசாலைகளில் கல்வி பயிலும் மிகவும் வறிய மாணவர்களுக்கு கல்வியை செவ்வனே முன்னெடுக்க இவ்வமைப்பு பத்து வருடங்களுக்கு மேலாக புலமைப் பரிசில்களை வழங்கி வருகிறது.

எதிர் காலத்திலும் வறிய மாணவர்களுக்கு புலமை பரிசில்களைப் பெற்றுக் கொடுப்பதற்கு தனவந்தவர்களின் நிதி உதவிகளைப் பெற்றுக் கொள்வது தொடர்பில் கலந்துரையாடப்பட்டது.

ஓய்வு பெற்ற கல்விப் பணிப்பாளரும் அமைப்பின் முன்னாள் தலைவருமான ஏ.டப்ளியு.எம்.அஜ்வாத், அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா சபையின் பொருலாளரும் இவ் அமைப்பின் செயலாளருமான கலாநிதி அஸ்வர் அஸாஹிம் (அல்-அஸ்ஹரி), தர்கா நகர் முஸ்லிம் மகளிர் தேசிய பாடசாலை அதிபர் பி.எம்.எம்.ஜாபிர் ஆகியோர் இங்கு கருத்துக்களை முன் வைத்ததோடு, அப்ரார் கல்வி நிலைய ஸ்தாபகர் பாராளுமன்ற உறுப்பினர் இம்தியாஸ் பாக்கீர் மாக்கார் சமூகத்தின் கல்வி மறுமலர்ச்சி முன்னேற்றம் குறித்து உரையாற்றியமை குறிப்பிடத்தக்கது.

# வெகு விமரிசையாக நடைபெற்ற அபெக்ஸ் கெம்பஸ் பட்டமளிப்பு விழா

















அபெக்ஸ் கெம்பஸ் பட்டமளிப்பு விழா திங்களன்று (29.04.2024) பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தின் பிரதான அரங்கில் பல்கலைக்கழகத்தின் ஸ்தாபத் தலைவர் எம். எஸ்.ஜே. றிசாட் தலைமையில் நடைபெற்றது.

பிரதான காரியாலயம் வெள்ளவத்தையில் அமைந்துள்ளதுடன் இப் பல்கலைக்கழகத்தின் கிளைகள் அநுராதபுரம், கண்டி, புத்தளம், காலிஇ பதுளை போன்ற பிரதேசங்களில் செயற்பட்டு வருகின்றன. அபெக்ஸ் கெம்பஸ் ஊடாக தொழில் முனைவோர் உட்பட பாடசாலைக் கல்வியை விட்டு விலகிய உயர்தரம் சித்தியெய்திய மாணவர்களும் பட்டப் படிப்பினை மேற்கொள்வதற்கான வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்துள்ளது.

இப் பட்டமளிப்பு விழாவின் பிரதம அதிதியாக தென்கிழக்கு பல்கலைக்கழக உபவேந்தர் ஜனாதிபதி சட்டத்தரணி பாயிஸ் முஸ்தபா கலந்து கொண்டதுடன் மாணவ, மாணவிகளுக்கு சான்றிதழ்களையும் வழங்கி வைத்தார்.

இந் நிகழ்வில் தென்ஆபிரிக்காவின் இலங்கைக்கான தூதுவர் சன்டில் எட்வின் சால்க், பங்களாதேஷ் நாட்டின் உயர் ஸ்தானிகர் தாரிக் ஆரிபுல் இஸ்லாம், மற்றும் மாலைதீவு நாட்டின் பிரதித் தூ துவர் மற்றும் அரச பல்கலைக்கழகங்களது பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள், கல்வி அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

மேற்படி நிகழ்வில் கலை, விஞ்ஞானப்பட்டங்கள் கல்வி முதுமானிப் பட்டம், வர்த்தக முகாமைத்துவம், வர்த்தக முதுமாணி மற்றும் உயர்தேசிய டிப்ளோமா சான்றிதழ்கள் வழங்கப்பட்டதுடன் சுமார் 170க்கும் மேற்பட்ட பட்டதாரிகள் பட்டங்களை பெற்றுக் கொண்டமை விசேட அம்சமாகும்.

நிகழ்வின் இறுதியில் சிரேஷ்ட ஊடகவியாளர்கள் கௌரவிக்கப்பட்டதுடன் அவர்களுக்கு விசேட விருதுகள் வழங்கப்பட்டு அவர்களது ஊடக சேவைக்கான பாராட்டுதல்களும் இடம்பெற்றன.

ஸ்ரீ லங்கா முஸ்லிம் மீடியா போரத்தின் தலைவரும் உதயம் பத்திரிகை ஆசிரியருமான சிரேஸ்ட ஊடகவியலாளர் என்.எம். அமீன், வசந்தம் தொலைக்காட்சியின் முகாமையாளர் இர்பான் மொஹமட், கொழும்பு டைம்ஸ் வெப்தள பிரதம ஆசிரியரும் முன்னாள் அரப் நியுஸ் ஆசிரியருமான மொஹமட் ரசூல்டீன், ரூபாவாஹினி தொலைக்காட்சியின் தமிழ்ச் செய்தி பணிப்பாளர் காசீம் பாவா மொஹமட் சியாம், லேக் ஹவுஸ் நிறுவன விளம்பரபீட உத்தியோகத்தர் எம்.ஐ. நிசாம்தீன், வசந்தம் பிராந்திய செய்தியாளர் மற்றும் லேக் ஹவுஸ் பத்திரிகைகளின் செய்தியாளர் அஷ்ரப் ஏ சமத், மற்றும் சிங்கள, தமிழ் பத்திரிகைகளின் செய்தி ஆசிரியர்களது ஊடக சேவைகளை கௌரவித்து விருதுகளை வழங்கி வைத்தமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

# உலக தொழிலாளர் தினத்தை முன்னிட்டு சாய்ந்தமருது மாளிகைக்காடு வர்த்தகர் சங்கம் ஏற்பாடு செய்த நிகழ்வு



(யூ.கே. காலித்தீன்)

சாய்ந்தமருது - மாளிகைக்காடு வர்த்தக சங்கத்தின் தலைவர் தலைவர் எம். எஸ். எம். முபாறக் தலைமையில் உழைக்கும் வர்க்கத்துக்கு, உழைப்பால் உயர்ந்தவர்களின் கௌரவம்" எனும் தொனிப்பொருளில் முழு நாள் நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது.

இந் நிகழ்வுக்கு சாய்ந்தமருது பிரதேச செயலாளர் ஏ. ஆசிக், கல்முனை மாநாகர சபை ஆணையாளர் ஏ.எல்.எம். அஸ்மி, சாய்ந்தமருது பொலிஸ் நிலைய பொறுப்பதிகரி யூ.எல். சம்சுதீன் ஆகியோர் சிறப்பு அதிதிகளாக கலந்து கொண்டனர்.

தொழிலாளர் தினத்தை தொழிற் சங்கங்கள் அனுஷ்டித்து வரும் நிலையில், தம்மிடம் தொழில் புரியும் ஊழியர்களை கௌரவிக்கும் வகையில் முதற்கட்டமாக கல்முனை மாநாகர சபை சுத்திகரிப்பு ஊழியர்களை கௌரவிக்கும் நிகழ்வும் சாய்ந்தமருது முபாறக்ஸ் முன்றலில் இடம் பெற்றது.

இந்நிகழ்விற்கு என்றுமில்லாதவாறு அனைத்து வர்த்தக நிலையங்களையும் மூடி தொழிலாளர்கள் தினத்தை கொண்டாடுவது இந்த பிராந்தியத்தின் முன்மாதியானதாக செயற்பாடு என பலரும் பாராட்டினர்.

# இலங்கைக்கான இந்திய உயர் ஸ்தானிகர் காத்தான்குடி விஜயம்



(எம்.பஹத் ஜுனைட்)

காத்தான்குடி பள்ளிவாசல்கள், முஸ்லிம்களின் நிறுவனங்களின் சம்மேளனத்தின் அழைப்பின் பெயரில் இலங்கை நாட்டிற்கான இந்திய உயர் ஸ்தானிகர் சந்தோஷ் ஜா வியாழக்கிழமை (02) காத்தான்குடிக்கு விஜயம் ஒன்றை மேற்கொண்டார்.

சம்மேளனத்தின் உப தலைவர் எம்.சீ.எம்.ஏ.சத்தார் தலைமையில் காத்தான்குடி மெத்தை ஜு/ம்ஆப் பெரிய பள்ளிவாசலில் இடம்பெற்ற இந் நிகழ்வில் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அலிசாஹிர் மௌலானா, காத்தான்குடி நகர சபை செயலாளர் ரிப்கா ஷபீன், காத்தான்குடி மெத்தை ஜும்ஆப் பெரிய பள்ளிவாசல் தலைவர் ரவூப் ஏ மஜீட், மற்றும் சம்மேளனத்தின் செயலாளர் உள்ளிட்ட உறுப்பினர்கள், ஊர் பிரமுகர்கள், பாடசாலை மாணவர்கள், ஊடகவியலாளர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

இங்கு சிநேகபூர்வ விஜயத்தை மேற்கொண்ட இலங்கை நாட்டிற்கான இந்திய உயர் ஸ்தானிகருக்கு மெத்தைப் ஜும்ஆப் பெரிய பள்ளிவாசல் மற்றும் சம்மேளனம் சார்பில் நினைவுச் சின்னம் வழங்கி கௌரவிக்கப்பட்டதுடன் சம்மேளனத்தின் செயலாளரினால் மஹஜர் ஒன்றும் கையளிப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# சம்மாந்துறை மீடியா போரத்தினால் நடாத்துப்பட்ட ஊடகச் செயலமர்வு





சம்மாந்துறை மீடியா போரத்தின் ஏற்பாட்டில் "பத்திரிகை வடிவமைப்பும், நெறியாழ்கையும், தொலைக்காட்சி செய்தி தயாரித்தல் மற்றும் சமாதான ஊடகக் கோட்பாடுகள்" ஆகிய தலைப்புகளை மையப்படுத்திய செயலமர்வு சம்மாந்துறை சமாதான கற்கைகளுக்கான நியைத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

போரத்தின் தலைவரும், மூத்த ஊடகவியலாளருமான எம்.ஐ.பி. பௌசுதீன் தலைமையில் ஆரம்பமான இந் நிகழ்வில் வளவாளர்களாக சிரேஷ்ட ஊடகவியலாளர்களான யூ.எல்.எம். றியாஸ், கியாஸ் ஏ புஹாரி ஆகியோரும் சிறப்பு வளவாளராக பேராசிரியர் எஸ். எல். றியாஸ் அவர்களும் கலந்துகொண்டு விரிவுரையாற்றினார்கள்.

குறித்த செயலமர்வில் சுமார் 20 பேர் பயனடைந்ததுடன், நிகழ்வின் இறுதியில் பெறுமதியான சான்றிதழும் வழங்கி வைக்கப்பட்டது.

இந்த செயலமர்வானது சம்மாந்துறை மீடியா போரத்தின் ஊடகக் கல்வி வளர்ச்சித் திட்டத்தின் கன்னி நிகழ்வு என்பதும் குறிப்பிடத்தக்கது.

இந் நிகழ்வில் சிறப்பு விருந்தினர்களாக போரத்தின் பொதுச் செயலாளர் ஏ.ஜே.எம். ஹனீபா ஜே.பி., நிருவாகச் செயலாளர் எம். எச்.எம். ஹாரிஸ் உட்பட நிறைவேற்றுக் குழு உறுப்பினர்களான எம்.சி. அன்சார், எம்.எல். இஷ்ஹாக், சி.எம்.யூ. தாரிக் ஆகியோரும் கலந்து சிறப்பித்தனர்.

# ஜீலான் மத்திய கல்லூரியில் குர்ஆன் - தப்ஸீர் பாடநெறி



(பரீட் இக்பால்)

பாணந்துறை ஜீலான் மத்திய நவோதய கல்லூரியில் (தேசிய பாடசாலை) பழைய மாணவிகள் சங்கத்தினால் ரமழான் மாதத்தில் நடாத்தப்பட்ட குர்ஆன் - தப்ஸீர் பாடநெறி வகுப்பில் சித்தியடைந்த மாணவிகளுக்கு கல்லூரி அதிபர் ஏ.எம் .ஹலீம் மஜீத் சான்றிதழ் வழங்குவதையும் அருகில் பாடசாலை அபிவிருத்தி குழு செயலாளர் அஸ்ஸெய்க் எம்.ஆர். றிழ்வான் (இஸ்லாஹி), பழைய மாணவிகள் சங்க செயலாளர் பஸ்னா இக்பால் ஆகியோரையும் படத்தில் காணலாம்.

# அக்குறனையில் ஆர்ப்பாட்டம்





(இக்பால் அலி)

அக்குறணை பிரதேச சபையினால் கடந்த நான்கு வருடமாக பாதைகள் செப்பனிடப்படாமலும் அபிவிருத்திப் பணிகள் முன்னெடுக்கப்படாலும் புறக்கணிகக்ப்பட்டு வருதாக சுட்டிக் காட்டி அக்குறணை நகரில் ஜு/ம்ஆத் தொழுகையை அடுத்து ஆர்ப்பட்டம் இடம்பெற்றது.

நீர் வழங்கல் வேலைத் திட்டத்திற்காக கடந்த நான்கு வருடங்களுக்கு முன் வெட்டப்பட்ட பட்ட பாதைகள் இன்னும் செப்பனிடாமல் இருப்பதாகவும் கழிவுகள் சீராமன முறையில் முன்னெடுக்ப்படாமலும் பல்வேறு உட்கட்டமைப்பு வசதிகள் கவனத்தில் கொள்ளாமல் புறக்கணிப்பட்டு வருவதைக் கண்டித்து அக்குறணைப் பிரதேச மக்கள் பதாதைகளை ஏந்திக் கொண்டு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

அக்குறணை பிரதேச சபைக்கு அதிகளவிலான வரிப்பணம் அக்குறணை நகரில் இருந்து அறவிடப்பட்ட போதிலும் அபிவிருத்தியின் போது அக்குறணை பிரதேசம் புறக்கணிக்கப்பட்டு வருவதாக பிரதேசவாசிகள் தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பில் பிரதேச மக்கள் அனைவரும் கையொப்பமிட்டு பிரதேச சபையின் செயலாளரிடம் கோரிக்கை ஒன்றை முன் வைத்துள்ளனர்.

# "கல்விக்கு கை கொடுப்போம்" திட்டத்தின் கீழ் பகுதிநேர வகுப்புகள் ஆரம்பம்





(பீ.எம். முக்தார்)

தர்கா நகர் ரூமி ஹாசிம் கல்வி நிலையத்தின் "கல்விக்கு கை கொடுப்போம்" என்ற திட்டத்தின் கீழ், தர்கா நகர் (டி.எஸ்.பி) விஞ்ஞானப்பிரிவினரால் பகுதிநேர வகுப்புகள் அண்மையில் ஆரம்பிக்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து அளப்பெரிய சேவைகளில் ஒன்றான தரம் 5, 9, 10, 11, மாணவர்களுக்கான மேலதிக வகுப்புகளை விரிவாக்கம் செய்து செயலமர்வுகள் நடைபெற்று வருகின்றன.

மேலும், தர்கா நகர், பேருவளை மருதானை போன்ற பிரதேச பாடசாலைகளில் செயல்படுத்தி வரும் இத்திட்டத்தின் மாளிகாஹேனை ஸேம் ரிபாய் ஹாஜியார் மற்றும் பாடசாலை அதிபர் குமார் ஆகியோரின் தலைமையில் இடம் பெறும் மேலதிக வகுப்புகளுக்கு முழுமையான ஒத்துழைப்பை மருந்தாக்கற் கூட்டுத்தாபனத்தின் முன்னாள் முகாமையாளரும், தர்கா நகர் ரூமி ஹாசிம் கல்வி நிலையத்தின் ஸ்தாபகத் தலைவருமான, கலாநிதி ரூமி ஹாசிம் வழங்கியிருந்தார்.

# இந்திய தேர்தலில் முஸ்லிம்களுக்கு எதிராக தலை விரித்தாடும் வெறுப்பு பிரச்சாரம்!



எஸ்.ஏ. சுஃப்யான்
(Senior Journalist, Chennai - Tamilnadu, India)

இந்தியா உலகின் மிகப்பெரிய ஜனநாயக நாடு. ஜனநாயக ஆட்சி அமைப்பில் தேர்தல்கள் அரசியலின் மிக முக்கியமான மற்றும் முக்கியமான பகுதியாகும். அதிகாரப் பதவிகளுக்கான தேர்தல்கள் சுதந்திரமாகவும் நியாயமாகவும் நடைபெறும் போதுதான் உண்மையான ஜனநாயகம் செயல்பட முடியும்.

## இந்திய தேர்தலில் மதம் மற்றும் சாதிவெறி

இந்திய குடியரசு ஆன பிறகு நடந்த தேர்தல்களில் இது வரை முதல் முதலாக பிரதமர் ஒருவரே மத வெறி அரசியலை முன்னின்று நடத்தினார் என்கிற வரலாறு இந்தியாவில் இந்த தேர்தல் ஊடாக பதிவு செய்யப்பட்டுள்ளது.

கடந்த 10 ஆண்டுகளாக மோடி தலைமையிலான இந்துத்துவா கருத்தியல் ரீதியான அரசியல் இதுவரை இந்தியாவின் வளர்ச்சி மற்றும் சர்வதேச நல்லிணக்கம் சார்ந்த உறவுகளை மேம்படுத்திக் கொள்ள மிகுந்த தடையாக இருந்து வருகிறது என்று பெரும்பாலான நடுத்தர சக்திகள் கருத்து தெரிவித்து வந்த நிலையில் இந்த தேர்தலில் அது முழுமையாக நிரூபணம் ஆகியுள்ளது என்பதே யதார்த்தமான உண்மையாகும் . மொத்தம் 7 கட்டங்களாக இந்திய தேர்தல் நடைபெறும் வகையில் இந்திய தலைமை தேர்தல் கமிஷன் அறிவிப்பு செய்து இருந்த நிலையில் இதுவரை 2 கட்டங்களாக தேர்தல் நடைபெற்று முடிந்துள்ளது.இந்திய தேர்தல் கமிஷன் இந்த முடிவுகள் முழுமையாக மோடி அரசின் சுயாதீன நடவடிக்கைகள் அடிப்படையில் தான் எடுக்கப்பட்டதாக காங்கிரஸ் கட்சி உட்பட எதிர் கட்சிகள் கடுமையான குற்றச்சாட்டுகளை சுமத்தி உள்ளது. இந்தியாவில் 28 மாநிலங்கள் மற்றும் 8 யூனியன் பிரதேசங்கள் உள்ளது. இவற்றில் மொத்தமாக 96 கோடி மக்கள் வாக்களிக்க போகிறார்கள்.

தற்போது நிலையில் தமிழ் நாடு மற்றும் பாண்டிச்சேரி உட்பட 40 இடங்களுக்கான தேர்தல் முதற்கட்டமாக நடந்து முடிந்த நிலையில் இரண்டாம் கட்ட தேர்தலும் நடந்து முடிந்து விட்டது. இந்த மாதம் 6 ந் தேதி மூன்றாம் கட்ட தேர்தல் வட இந்திய மாநிலங்களில் உட்பட பல்வேறு மாநிலங்களில் நடைபெற உள்ளது. அதேநேரத்தில் இந்த தேர்தலில் முதற் கட்டமாக நடைபெற்ற தேர்தலுக்கு பிந்தைய காலகட்டத்தில் தான் பிஜேபி தலைவரும் நாட்டின் பிரதமருமான நரேந்திர மோடி விஷம் கலந்த கருத்தை பொது ஊடகங்கள் முன்பாக எந்தவொரு தயக்கமும் இல்லாமல் மேடையில் பரப்புரையினுடாக எடுத்துக் வைத்து ஒட்டு மொத்த இந்திய சமூகத்தின் பார்வையை திருப்பினார்.

மோடி ராஜஸ்தான் மாநிலத்தில் நடைபெற்று தேர்தல் பரப்புரை கூட்டத்தில் தான் இந்தியாவில் வாழும் முஸ்லிம்களை குறித்து கொச்சையான வார்த்தைகளை முழங்கினார். அந்த பேச்சில் முஸ்லிம்கள் அதிகம், அதிகமாக குழந்தைகளை பெற்றுக் கொள்பவர்கள் என்றும், இந்திய முஸ்லிம்கள் அந்நிய தேசத்தில் இருந்து இந்தியாவிற்குள் ஊடுருவல் செய்த இனத்தவர்கள் என்றும் அவர் கூறினார்.அதே நேரத்தில் இந்திய தேசிய காங்கிரசுடன் முஸ்லிம்களுக்கு ரகசிய உறவு உண்டு என்றும் அதனால் இந்து பெண்களின் தாலியில் உள்ள தங்கத்தை பறித்து முஸ்லிம்கள் இடம் ஒப்படைத்து விடுவார்கள் என்றும் தனது தேர்தல் பரப்புரையில் மோடி பேசினார். இது போன்ற பேச்சை கேட்க இந்தியில் வாழும் அணைத்து பொது மக்களும் அதிர்ச்சி அடைந்து விட்டார்கள் என்பதே யதார்த்தமான உண்மை. அதனைத் தொடர்ந்து பேசிய இந்திய பிரதமர் நரேந்திர மோடி தனதுரையில் தனது உயிர் இருக்கும் வரையில் முஸ்லிம்களுக்கு கல்வி மற்றும் வேலை வாய்ப்புக்களில் இட ஒதுக்கீடு வழங்கப் போவதில்லை என்றும் அவர் கூறினார். இதற்கு காரணத்தை கூறிய அவர் கடந்த 2006 ம் ஆண்டு இந்திய முஸ்லிம்கள் கல்வி நிலையின் மிக மோசமான நிலை குறித்து வெளியான கமிட்டி அறிக்கை குறித்து அன்றைய பிரதமர் மன்மோகன் சிங்கின் பழைய உரையை மேற்கோள் காட்டி முஸ்லிம்கள் குறித்து மோடி கருத்து தெரிவித்தார். அதாவது நீங்கள் (இந்துக்கள்) காங்கிரஸ் கட்சிக்கு வாக்களித்தால் உங்களின் சொத்துக்களை முழுமையாக பிடுங்கி முஸ்லிம்கள் இடம் காங்கிரஸ் கட்சி ஒப்படைத்து விடுவார்கள் என்று மிகப்பெரிய பொய்யான செய்தியை மக்களிடையே கூறினார். இப்படி இந்தியாவில் எந்த ஒரு பிரதமரும் சொல்லத் துணியாத பொய்யை நரேந்திர மோடி தேர்தல் பரப்புரை வாயிலாக எடுத்து கூறினார்.

சர்வதேச பத்திரிகைகள் கண்டனம்.

இதுகுறித்து கடந்த ஏப்ரல் 22ஆம் தேதி அமெரிக்க நாளிதழான "வாஷிங்டன் போஸ்ட்" தனது இணையதளத்தில், "தேர்தல் பொதுக் கூட்டத்தில் முஸ்லிம்களுக்கு எதிராக வெறுப்பு பிரசாரம் செய்ததாக மோதி மீது குற்றச்சாட்டு எழுந்துள்ளது," என்ற தலைப்பில் கட்டுரை ஒன்றை வெளியிட்டது.

சௌத் சைனா மார்னிங் போஸ்ட்" என்ற சீன செய்தி இணையதளம், தேர்தலில் வெற்றி பெறுவதற்காக மோதி முஸ்லிம்களுக்கு எதிராகப் பேச ஆரம்பித்துவிட்டார் எனத் தனது கட்டுரையில் குறிப்பிட்டுள்ளது.

லண்டனில் இருந்து வெளிவரும் டைம்" பத்திரிகையும் இதுகுறித்து கட்டுரை வெளியிட்டுள்ளது.

நீண்ட காலமாகவே, அவர் நாட்டிற்குள் நடக்கும் இதுபோன்ற நிகழ்வுகளில் இருந்து விலகி இருப்பதையும், வெளிநாட்டில் தனது நற்பெயரைத் தக்க வைத்துக் கொள்வதையும் செய்து வந்தார். ஆனால் ஞாயிற்றுக்கிழமை மாலை, தேர்தல் உரையில், "அதிக குழந்தைகளைப் பெற்றுள்ள முஸ்லிம்கள்', 'ஊடுருவல்காரர்கள்" என்று அவர் முஸ்லிம்களை விமர்சித்தது பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியது" என்று நியூயார்க் டைம்ஸ் குறிப்பிட்டுள்ளது.

இந்தியாவில் சற்றேறக்குறைய 30 கோடிக்கு மேலாக முஸ்லிம்கள் வாழ்ந்து வருகின்றனர். உலகில் இந்தோனேசியாவை அடுத்த அளவில் முஸ்லிம்கள் இந்தியாவில் தான் அதிக எண்ணிக்கையில் வாழ்கின்றனர்.அதே நேரத்தில் இந்திய முஸ்லிம்கள் இந்தியாவின் சுதந்திரம் மற்றும் தேசத்தின் வளர்ச்சிக்கு மிகவும் அதிகமாக தியாகம் செய்து இருப்பதும் உண்மைதான்.

இந்திய பிரதமர் நரேந்திர மோடி தலைமையிலான இந்து தேசிய அரசாங்கம் மற்றும் அரசியல்வாதிகள் கடந்த 10 ஆண்டுகளாக இந்தியாவை ஆட்சி செய்து வரும் நிலையில் இந்திய முஸ்லிம்கள் மீது தொடர்ந்து சேற்றை வாரி வீச தயங்கவில்லை. குறிப்பாக வட இந்திய இந்துக்கள் மத்தியில் இஸ்லாம் மற்றும் முஸ்லிம்களை ஆர்.எஸ்.எஸ் அமைப்பு பொது எதிரியாக துருவமுனைப்படுத்தி உள்ளது.இதன் மூலம் பாகிஸ்தான், பயங்கரவாதம் மற்றும் முஸ்லிம்களை பொது எதிரியாக கொண்டே பிஜேபி அனைத்து தேர்தல்களிலும் வெற்றி பெற்று வருகிறது. அதே நேரத்தில் தென்னிந்திய மாநிலங்களில் பிஜேபி எந்தவொரு நிலையிலும் வெற்றி பெற சாத்தியக்கூறு அறவே இல்லை என்பதே உண்மையாகும்.

தற்போதைய நிலையில் இந்தியாவில் அரசியல் களம் முழுமையாக மாறி இருப்பதை யாருக்கும் ஆச்சரியம் இல்லைதான் .

இந்தியாவில் தற்போது உண்மை நிலை என்னவென்றால் மோடி முதற் கட்டமாக பிரச்சாரம் முடிந்த நிலையிலே தனது பிரச்சார தொனியை முழுமையாக மாற்றி விட்டார். முதல் கட்ட தேர்தலில் அவர் நாட்டின் வளர்ச்சி, நாட்டின் முன்னேற்றம் என்று பொது மேடையில் பரப்புரையினுடாக பேசிக் கொண்டு இருந்த நிலையில் தீடிரென அது வெறுப்பு பிரச்சாரமாக மாறியது. தற்போதைய நிலையில் எல்லா வகையிலும் முஸ்லிம்கள் குறித்தே அதிகம் பேசுகிறார். நாம் ஏற்கனவே கட்டுரை முதலில் சுட்டி காட்டியது போன்று முஸ்லிம்கள் அதிகம் குழந்தை பெற்றுக் கொண்டு தங்கள் எண்ணிக்கையை அதிகரிக்க கூடியவர்கள் என்றும் , ஊடுருவல் சமூகம் என்றும், இந்திய இந்து மதத்தினரின் சொத்துக்களை அபகரிப்பு செய்து விடுவார்கள் என்றும் மட்டுமே பேசி வருகிறார். அதேநேரத்தில் எனது உயிர் இருக்கும் வரைக்கும் இந்தியாவில் முஸ்லிம்களுக்கு கல்வி மற்றும் வேலைவாய்ப்பில் இடஒதுக்கீட்டை ஒரு போதும் அனுமதிக்க போவதில்லை என்று வெறுப்பு பிரச்சாரத்தை முன்னெடுக்கும் நிலையில் ஒட்டு மொத்த முஸ்லிம் சமூகத்தை சார்ந்த மக்களும் ஒரு விதமான கலக்க மனநிலையில் தான் இருந்து வருகின்றனர் என்பதை நாம் மறுக்க இயலாது.

அதேநேரத்தில் தற்போதைய நிலையில் ராகுல் காந்தி தலைமையில் ஆன இந்திய தேசிய காங்கிரசு கட்சியின் சார்பாக வெளியிடப்பட்ட தேர்தல் வாக்குறுதிகள் பொது சன மக்களை மிகவும் சிறப்பான முறையில் கவர்ந்து இருப்பதாக நம்பப்படுகிறது. காங்கிரஸ் கட்சியின் தேர்தல் அறிக்கையினுடாக பெண்கள், விவசாயிகள், இளைஞர்களுக்கான வேலை வாய்ப்புக்கள் குறித்து சாத்தியமான வாக்குறுதிகள் வழங்கப்பட்டுள்ளது. அதிலும் பெண்களுக்கு மாதம் இந்திய மதிப்பில் 8,000 ரூபாய் வழங்கப் போவதாக கூறியது பெரிய அளவில் வரவேற்பைப் பெற்றுள்ளது. விலைவாசி உயர்வு, வேலையின்மை தொழில் துறை உற்பத்தி, வளர்ச்சி மற்றும் சர்வதேச நல்லிணக்கம் சார்ந்த விடயங்களை மேம்படுத்துதல் ஆகிய திட்டங்களை காங்கிரஸ் கட்சியின் வாக்குறுதியில் தெளிவாக கோடிட்டுக் காட்டியுள்ளது மக்களுக்கு பெரிய அளவில் நம்பிக்கையை ஏற்படுத்தும் வகையில் இருப்பதாக நம்பப்படுகிறது. விவசாயிகள் கடன் ரத்து, மாணவர்கள் கல்வி கடன் ரத்து, ஆட்சிக்கு வந்த உடன் மத்திய அரசு பணியில் 30 இலட்சம் வேலை வாய்ப்புக்களை உருவாக்குதல் போன்ற பல்வேறு வாக்குறுதிகளை காங்கிரஸ் கட்சி தனித்துவமாக தனது வாக்குறுதியில் வழங்கி இருப்பது தான் எதிர் கட்சிகளை மகிழ்ச்சியில் ஆழ்த்தியுள்ளது. இந்த திட்டங்கள் அனைத்தும் நிறைவேறும் பொருட்டு பல இலட்சக்கணக்கான அமெரிக்கா பில்லியன் டாலர்கள் அளவுக்கு செலவு பிடிக்கும் என்பதே யதார்த்தமான உண்மையாகும்.

காங்கிரஸ் கட்சியின் தேர்தல் அறிக்கை மக்களிடையே நல்ல வரவேற்பை பெற்றுள்ளது என்பதை அறிந்து கொண்ட இந்திய பிரதமர் நரேந்திர மோடி நம்ப முடியாத அளவுக்கு மிகவும் மோசமான குற்றச்சாட்டுகளை எதிர் கட்சிகள் மீது குறிப்பாக காங்கிரஸ் கட்சியின் தலைமை சுமத்தி வருகிறார். அந்த குற்றச்சாட்டுகள் பலவும் கேலிக் கூத்தாக இருக்கிறது.

இதன் தொடர்ச்சியாக ராகுல் காந்தி வெற்றியை கண்டு முஸ்லிம் ஜிஹாதி பயங்கரவாத குழுக்கள் சந்தோஷம் அடைவதாக குற்றம் சாட்டி உள்ளார். இரண்டாவதாக , பாகிஸ்தான் ராகுல் காந்தியின் தலைமையிலான காங்கிரசு கட்சியின் வெற்றியை எதிர்பார்த்து காத்திருப்பதாக முஸ்லிம் வெறுப்பை பொது சமூகத்தில் விதைத்து வருகிறார். அதேநேரத்தில் 2008 ம் ஆண்டு பாகிஸ்தான் பயங்கரவாத குழுக்கள் இந்தியாவில் கடல் மார்க்கமாக நுழைந்து தாக்குதல் நடத்திய நிலையில் 195 பொது மக்கள் படுகொலை செய்யப்பட்டனர். இந்த படுகொலை சம்பவத்தில் சம்பந்தப்பட்ட பயங்கரவாதிகளை பாதுகாக்க காங்கிரஸ் கட்சியின் தலைவர் முயற்சி செய்து வந்ததாக மிகப் பெரிய பொய்யை மோடி கட்டவிழ்த்து விட்டு இருக்கிறார். அதேநேரத்தில் சர்வதேச நாடுகள் தன்னை தேர்தலில் தோற்கடிக்க கடுமையான அளவில் முயற்சி செய்து வருவதாக தொடர்ந்து பிரச்சாரத்தில் கூறி வருகிறார்.

இது போன்ற குற்றச்சாட்டுகளை மோடி கூறி வருவது தோல்வி பயம் காரணமாகவே என்று இந்திய ஊடகங்கள் மற்றும் சமூக வலைத்தளங்களில் செய்திகள் பரவி வருகிறது. அயோத்தியில் இராமனுக்கு கோயில் கட்டி வழிபாடு நடந்து வரும் நிலையில் இது அவருக்கு எந்த விதத்திலும் பலன் கிடைக்காது என்பதே பொது கருத்தாக இருக்கிறது. ஏனெனில் வட இந்திய மாநிலங்களில் மக்கள் ஸ்ரீராமர் மீது அளவுகடந்த பக்தி கொண்ட நிலையில் மோடி அரசு இதனை தங்களுக்கு சாத்தியமாக மாற்றிக் கொள்ள முயற்சி செய்தது. கோயில் கட்டி பிரதான பிரதிஷ்டை நடந்த வேளையில் இதன் காட்சிகள் எல்லா ஊடகங்களிலும் நேரவையில் பல மணி நேரம் ஒளிபரப்பு செய்யப்பட்டது. இதில் கதாநாயகனாக மோடி நடித்தார் என்று சொல்லும் அளவுக்கு காட்சிகள் அரங்கேற்றம் செய்யப்பட்டது. ஆனாலும் இந்து மக்கள் இதனை மோடிக்கு ஆதரவாக எண்ணவில்லை என்று தான் தற்போது செய்திகள் வெளியாகியுள்ளன. இது இந்து தேசியம் பேசும் அடிப்படைவாத சித்தாந்த குழுக்களுக்கு பெருத்த ஏமாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது.

அதேநேரத்தில், வட இந்திய மாநிலங்களில் வேலையின்மை, விலைவாசி உயர்வு, ஊழல் பிரச்சினைகள் மிகுந்த பாதிப்பை ஏற்படுத்தி உள்ளதால் மக்கள் இந்த முறை மோடிக்கு ஆதரவாக வாக்களிக்கப் போவதில்லை என்று முடிவு எடுத்து இருப்பதாக செய்திகள் வெளியாகியுள்ளன. அதனால் தான் மோடியும் பாரதிய ஜனதா கட்சியின் பேச்சாளர்கள் அனைவரும் மீண்டும், மீண்டும் முஸ்லிம்கள் பற்றிய போலியான கெட்ட எண்ணங்களை பொது மக்கள் இடையே பரப்பி வருகின்றனர். இதன் மூலம் இந்து மதத்தின் பெரும்பாலான மக்கள் தங்களுக்கு வாக்களிப்பார்கள் என்று அவர்கள் நம்புகின்றனர். நாட்டையும், நாட்டு மக்களையும் எந்த விதத்திலும் இடைவிடாது காப்பேன் என்று மோடி இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தின் வாயிலாக உறுதி மொழி மற்றும் ரகசிய காப்பு பிரமாணம் செய்து விட்டு இந்தியாவில் வாழும் தனது மக்களுக்கு எதிராக வெறுப்பை விதைத்து வெற்றி பெற நினைப்பது சர்வதேச நாடுகள் அனைத்தும் உன்னிப்பாக கவனித்து வருகிறார்கள்.

பெரும்பான்மை இந்துக்கள் ஆள வேண்டும் அதேநேரத்தில் சிறுபான்மையினர் உரிமைகள் ஏதும் இல்லாமல் அமைதியாக வாழ வேண்டும் என்பது தான் ஆர் எஸ் எஸ் (RSS) அமைப்பின் பிதாமகன் கோல்வால்கர் மற்றும் சாவர்க்கர் தங்களின் கொள்கைகளாக வகுத்து விட்டு சென்றுள்ளார்கள். இந்த அமைப்பின் தொண்டராக தான் மோடி பல தசாப்தங்களாக பணியாற்றி விட்டு இந்தி பிரதமராக பதவி வகிக்கும் போது அவரது கொள்கை எப்படி இருக்கும் என்பதை நாம் புரிந்து கொள்ள அதிக காலம் தேவையில்லை என்பதே உண்மையாகும்.இந்தியாவில் கடும் போக்குவாத வங்குரோத்து நடவடிக்கைகள் மேற்கொண்டு வரும் இந்த மத துவேஷிகள் தங்களை மாற்றிக் கொள்ள ஒரு போதும் முன்வருவதில்லை என்பதே கசப்பான உண்மையாகும். ஆனாலும், அதனை முடிவு செய்வது காலத்தின் கைகளில் தான் உள்ளது என்பதை இந்த சமயத்தில் சொல்லிக் கொள்ள முடியும் என்பதை தவிர வேறு ஒன்றும் இல்லை என்பதே உண்மையாகும்.



இந்தியாவின் மக்கள்தொகை 1.44 பில்லியன் என்றும், அண்டை நாடான வங்கதேசம் மற்றும் மியான்மர் ஆகிய நாடுகளைச் சேர்ந்த முஸ்லிம்கள் உட்பட ஒட்டுமொத்த முஸ்லிம் சமூகத்தையும் வெளிநாட்டினராகப் பார்ப்பதற்காக மோதியின் பாஜக மீது விமர்சனம் எழுந்துள்ளதாக அந்தக் கட்டுரையில் பதிவு செய்துள்ளது.

அமெரிக்காவில் உள்ள முஸ்லிம்களின் உரிமைகளுக்காகப் பணியாற்றும் குழுவான "கவுன்சில் ஆஃப் அமெரிக்கன் இஸ்லாமிக் ரிலேஷன்ஸ்" (சிஏஐஆர்) வெளியிட்டுள்ள அறிக்கையில், மோதியின் பேச்சு விமர்சிக்கப்பட்டுள்ளது' என்றும் டைம்ஸ் கட்டுரையில் எழுதப்பட்டுள்ளது.

முஸ்லிம்கள் மற்றும் சிறுபான்மையினரை வித்தியாசமாக நடத்துவதால் இந்தியாவை "குறிப்பிட்ட அக்கறை கொண்ட நாடு" (Country of Particular Concern) என்ற பட்டியலில் சேர்க்குமாறு அமெரிக்க அதிபர் ஜோ பைடனை அந்த அமைப்பு கேட்டுக் கொண்டுள்ளது.

இதுகுறித்து நியூயார்க் டைம்ஸ் ஊடகமும் ஏப்ரல் 23ஆம் தேதி செய்தி வெளியிட்டது. அந்த இணையதளம் வெளியிட்ட செய்தியின் தலைப்பு – "மோதி இந்திய முஸ்லிம்களை 'ஊடுருவியர்கள்' என்று ஏன் அழைக்கிறார்? ஏனெனில் அவரால் அது முடியும்"

"அவரது ஆட்சி பாதுகாப்பானது என்று கருதி, பிரதமர் மோதி நாட்டின் பொருளாதாரம் மற்றும் ராஜ்ஜீய மட்டத்தில் வளர்ச்சிக்கான உலகளாவிய தலைவராக தன்னைக் காட்டிக் கொள்கிறார். இதன் மூலம் கட்சியில் நிலவும் பிளவு மனப்பான்மையில் இருந்து தன்னை விலக்கிக் கொள்கிறார்."

"இதற்கிடையில், அடிப்படைவாத குழுக்கள் இந்து அல்லாத சமூகங்களைக் குறிவைத்துப் பேசுகின்றனர், அவரது சொந்த கட்சியைச் சேர்ந்தவர்களே இனவாத மற்றும் வெறுப்பு பேச்சுகளை நாடாளுமன்றத்தில் பேசுகின்றனர். இதுபோன்ற விஷயங்களில் அவர் அமைதியாகி விடுவது வழக்கம்."

நாம் அவதானிக்க முடிகின்றது. இந்த மாற்றத்தை மக்கள் உணர்ந்து கொள்ள கூடாது என்ற அடிப்படையில் இந்திய இந்து தேசிய கட்சியான பிஜேபி உயர் மட்டத்தில் இருக்கும் எல்லா ஊடகங்களிலுக்கும் பெருந்தொகையான பணத்தை வாரி இறைத்து தங்கள் கட்சிக்கு இந்திய மக்கள் முழுமையாக வாக்களிக்க தயாராக இருப்பது போன்ற மாய பிம்பத்தை கட்டமைக்க முயன்று அதில் வெற்றி பெற்றனர். அதாவது 543 நாடாளுமன்ற உறுப்பினர் இடத்திற்கான தொகுதிகளில் 400 இடங்களில் பிஜேபி கட்சி மற்றும் அதன் தோழமை கட்சிகள் வெற்றி பெற்று விடும் என்பது போன்ற தோற்றம் தான் இதுவாகும். இந்த மனித உளவியல் மனநிலை மாற்றங்களை நிகழ்த்தி தொடர்ந்து உற்சாகமாக பிஜேபி தலைவர் மோடி தனது பரிவாரங்களுடன் பிரச்சாரத்தை முன்னெடுக்க எங்கும் அது பற்றிய பேச்சுக்கள் ஊடகங்கள் தொடர்ந்து ஒளிபரப்பு செய்தது .

இது போன்ற சூழல் கடந்த பிப்ரவரி மாதம் கடைசி வாரத்தில் இந்திய முழுவதும் காணப்பட்டன. மார்ச் மாதத்தில் நிலை ஓரளவுக்கு தெளிவாக கோடிட்டு காட்டப்பட்டது. ஏனெனில், தேசம் முழுவதும் 28 கட்சிகள் உடனான கூட்டணி அமைத்து ராகுல் காந்தி பிரச்சாரத்தை முன்னெடுக்க வட இந்திய மாநிலங்களில் அவருக்கு வெகுஜன வரவேற்பு அதிகமாக இருப்பதாக தெரிய வந்த நிலையில் பிஜேபி முகாம்களில் தற்போது ஒரு வித பதற்றம் ஏற்பட்டுள்ளது என்பதே உண்மையாகும்.

கடந்த ஏப்ரல் மாதம் 19 ந் தேதி மற்றும் 26 ந் தேதி இரண்டு கட்ட தேர்தலில் ஆளும் பிஜேபி ஒரளவு பின்னடைவை சந்திக்கும் என்று ரகசிய சர்வே வெளிவந்ததாக தேசிய ஆங்கில ஊடகங்கள் கருத்துக்களை தெரிவித்து இருந்த நிலையில் மீண்டும் இந்திய வாக்காளர்கள் ஒரு வித குழப்பத்தில் இருந்தார்கள் அல்லது இருந்து வருகிறார்கள் என்பதே யதார்த்தமான உண்மையாகும். ஏனெனில், ஊடகங்கள் பொதுசனங்களை வெகுவாக தொடர்ந்து குழப்பி வருகிறார்கள். அதுசார்ந்த வர்த்தக நோக்கில் அது தனது பயணத்தை தொடர்ந்து வருவதில்

## ரியாத் நகரில் நடைபெற்ற உலகப் பொருளாதார மன்றம் நிறைவு

# பல முக்கிய சந்திப்புகளை மேற்கொண்ட வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி

(காலித் ரிஸ்வான்)

சவூதி அரேபியாவின் ரியாத் நகரில், ஏப்ரல் 28-29ஆம் திகதிகளில் சவூதியின் பட்டத்து இளவரசரும் பிரதமருமான இளவரசர் முஹம்மத் பின் சல்மான் அவர்களின் ஆதரவில் நடைபெற்ற உலகப் பொருளாதார மன்றத்தின் (ுநுகு) சிறப்புக் கூட்டம், அதிகரித்து வரும் எல்லை தாண்டிய சவால்களை எதிர்கொள்வதற்கான ஸ்திரத்தன்மை, செழிப்பு மற்றும் வளர்ச்சியினை உள்ளடக்கிய வாய்ப்புகளுக்கான தெளிவான பாதைகளை சமைத்து வெற்றிகரமாக முடிவுற்றது.

"உலகளாவிய ஒத்துழைப்பு, வளர்ச்சி மற்றும் வளர்ச்சிக்கான ஆற்றல்" என்ற கருப்பொருளின் கீழ் நடைபெற்ற இம்மன்றத்தில் முன்னணி அரசியல், பொருளாதார மற்றும் முக்கிய தொழில்நுட்ப






பிரமுகர்கள் உள்ளடங்களாக 1,000 க்கும் மேற்பட்டவர்கள் பங்கேற்றனர். சுவிட்சர்லாந்தின் டாவோஸிற்கு வெளியே நடாத்தப்பட்ட ஒரு WEF நிகழ்வில் அதிக எண்ணிக்கையிலான பங்கேற்பாளர்களைக் கண்ட ஒரு முக்கிய நிகழ்வாக இது அமைந்தது.

இலங்கை சார்பாக இலங்கையின் வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி அவர்கள் இச்சிறப்புக் கூட்டத்தில் கலந்து கொண்டார். இப்பயணத்தின் போது சவூதி அரேபிய வெளிவிவகார அமைச்சர் பைசல் பின் பர்ஹான் உட்பட பல அரசியல் பிரமுகர்களை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தினார்.

இந்த நிகழ்வின் போது வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி மற்றும் சவூதி அரேபியாவின் முதலீட்டு அமைச்சர் காலித் அல் பலிஹ் ஆகியோர் இரு நாடுகளுக்கும் இடையேயான ஒரு முதலீட்டு ஊக்குவிப்பு கலந்துரையாடினர்.

பொருளாதார ரீதியாக வளர்ச்சியடைந்த மற்றும் மந்த நிலையிலுள்ள நாடுகள் தொடர்பாக சவூதி அரேபியா ஏற்பாடு செய்த கலந்துரையாடலில் இலங்கை பங்கேற்பதாகவும் வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி அவர்கள் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் முக்கியமாக பொருளாதார ரீதியான வளர்ச்சியில் மந்த நிலையில் உள்ள ஆசிய, ஆபிரிக்க மற்றும் லத்தீன் அமெரிக்க நாடுகள் குறித்து கவனம் செலுத்தப்பட்டது.

சுகாதாரம், செயற்கை நுண்ணறிவு மற்றும் விண்வெளி ஆராய்ச்சியியல் ஆகிய துறைகளில் பல முன்முயற்சிகளைத் தொடங்குவதற்கு இந்தக் கூட்டம் சந்தர்பத்தை அமைத்துக் கொடுத்துள்ளது குறிப்பிடத்தக்கது.

பில் மற்றும் மெலிண்டா கேட்ஸ் அறக்கட்டளை நிறுவனத்துடன் மூன்று முக்கிய ஒப்பந்தங்களை சவூதி அரேபியா மேற்கொண்டுள்ளது. பல நாடுகளில் அல்லது அந்தஸ்தைப் பொருட்படுத்தாமல் உலகளாவிய பொருளாதாரத்தை செழிப்பானதாக உருவாக்க வேண்டியதன் அவசியத்தையும் வலியுறுத்தினார். பருவநிலை மாற்றத்தை எதிர்கொள்வதற்கும் ஆற்றல் மாற்றத்தை ஆதரிப்பதற்குமான மூன்று முன்முயற்சிகளும் தொடங்கப்படுவதாக அறிவிக்கப்பட்டது.

முக்கிய துறைகளில் முன்னணி சவூதி நிறுவனங்களிடையே ஒத்துழைப்பை வளர்ப்பதற்காக ஒரு முன்னோடியான முன்முயற்சித் திட்டமும் அறிமுகப்படுத்தப்பட்டது. இது விரிவான மற்றும் நிலையான பொருளாதார வளர்ச்சி உத்திகளை உருவாக்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

கார்பன் சேமிப்பு மற்றும் பயன்பாடுகள் தொடர்பான புதிய கண்டுபிடிப்புகள் குறித்த அமர்வில், எரிசக்தி அமைச்சர் இளவரசர் அப்துல் அஸீஸ் பின் சல்மான், சமமான ஆற்றல் மாற்றத்திற்கான தீர்வுகளை ஆராய வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தினார், மேலும் எதிர்காலத்திற்கு ஏற்ற வகையிலும், வரவிருக்கும் தேவைகளை பூர்த்திசெய்யும் வகையிலும் எரிசக்தி ஆற்றல் துறையில் மேம்பட்ட அமைப்புகளையும் திட்டங்களையும் உருவாக்குவதன் முக்கியத்துவத்தை வலியுறுத்தினார்.

உலகளாவிய ஒத்துழைப்பு மேம்படுத்தல் தொடர்பான அதிகமான கலந்துரையாடல்கள் மற்றும் அமர்வுகள் இந்நிகழ்வில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. சவூதியன் வெளிவிவகார அமைச்சர் இளவரசர் பைசல் பின் பர்ஹான் அல்-சௌத் அவர்கள் தலையமையில் இவ்வமர்வுகள் இடம்பெற்றதோடு, மத்திய கிழக்கு, ஆப்பிரிக்கா மற்றும் கிழக்கு ஐரோப்பாவில் விரிவடைந்து வரும் மோதல்கள் உட்பட மிக முக்கியமான புவிசார் அரசியல் சவால்களை சமாளிப்பதற்கான ஒத்துழைப்பு தொடர்பான கலந்துரையாடல்கள் முக்கிய இடம் வகித்தது. இதே தலைப்பில் உரையாற்றிய வெளிவிவகார இராஜாங்க அமைச்சர் ஆதெல் அல் ஜுபைர், நிலையான பிராந்திய ஸ்திரத்தன்மையை அடைய தெளிவான பாதையைக் கண்டறிய வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தினார்.

உலக பொருளாதார மன்றத் தலைவர் பொர்க் ப்ரென்டே இக்கூட்டம் பற்றி கருத்து தெரிவிக்கையில் பாலஸ்தீன ஜனாதிபதி மஹ்மூத் அப்பாஸ், அமெரிக்க வெளியுறவு அமைச்சர் அன்டனி பிளிங்கன் மற்றும் இங்கிலாந்து வெளியுறவு செயலர் டேவிட் கேமரூன் உள்ளிட்ட முக்கிய உலகத் தலைவர்களை ஈர்த்த முக்கியமான ஒரு கூட்டம் என்றார்.

இந்த நிகழ்வில் பல புதிய திட்டங்கள் தொடங்கி வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. உதாரணமாக மாடர்னா (Moderna) தலைமை நிர்வாக அதிகாரி ஸ்டீபன் பான்செல், புற்றுநோய்க்கான முதல் மருத்துவ தயாரிப்பிற்கான பணிகளை 2025 ஆம் ஆண்டாகும் போது தொடங்குவதற்கான நிறுவனத்தின் திட்டங்களை அறிவித்தார்.




தொடர்பான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டனர். இது நீண்ட காலமாக உணரப்பட்ட தேவையாகவும் இரு நாடுகளிலும் முதலீட்டு வாய்ப்புகளை மேம்படுத்துவதற்கு பெரிதும் உதவுவதாகவும் அமையும்.

வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி அவர்களின் சவூதியின் பொருளாதாரம் மற்றும் திட்டமிடல் அமைச்சர் பைசல் பின் பாதில் அலி இப்ரஹிம் உடனான சந்திப்பின் போது இரு நாட்டுக்குமிடையாலான உறவுகள் மற்றும் பல்வேறு துறைகளில் ஒத்துழைக்கும் பகுதிகள் மற்றும் சமீபத்திய பிராந்திய மற்றும் உலகளாவிய முன்னேற்றங்கள் குறித்து சுகாதாரத்தை மேம்படுத்துதல் மற்றும் போலியோவை தடுக்கும் நோக்கத்துடன், மன்னர் சல்மான் மனிதாபிமான உதவி மற்றும் நிவாரண மையம் (KSrelief) மற்றும் சவூதியின் சுகாதார அமைச்சகம் ஆகியவை இணைந்து இவ்வொப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

சவூதியின் பொருளாதாரம் மற்றும் திட்டமிடல் அமைச்சர் பைசல் அலி இப்ராஹிம் கருத்துத் தெரிவிக்கையில், உலகம் வாய்ப்புகள் மற்றும் பொறுப்புக்களுக்கு மத்தியலான தடுமாற்ற நிலையல் உள்ளது என்றும், மேலும் ஒவ்வொரு நாடும் அதன் செல்வம்

# இனிப்பும் கசப்பும்



சட்டத்தரணி ஏ.எம்.வைஸ்

# புதிய பாதையில் பயணம் செய்வோம்

நோன்பு காலம் வந்து விட்டால் இப்தார் எனும் நோன்பு துறக்கும் நிகழ்வுகளும், ஆரம்பித்து விடும். இதை பெரும் விழாவாக பெரும் நிகழ்வாக செய்யும் நபர்களும் அமைப்புக்களும் உள்ளன. பெரும் செலவு செய்து சிலர் இந்த இப்தார் நிகழ்வுகளை ஐந்து நட்சத்திர ஆடம்பர ஹோட்டல்களில் செய்வதையும் கேள்விப்படுகின்றோம். சிலர் சில ஆயிரம் பேர்களை அழைத்து மண்டபங்களில் அல்லது பள்ளிவாசல்களில் செய்கிறார்கள். எமது நாட்டில் சில இயக்கங்கள் உள்ளனவா என்பதை இந்த இப்தார் நிகழ்ச்சி நடத்துவதன் மூலம் ஞாபகப்படுத்துகின்றனர். வருடம் முழுவதும் ஒன்றுமே செய்யாது தூங்கிக் கடந்து விட்டு ஒரு நாளைக்கு பெரிய இப்தார் நிகழ்சியை நடத்துவர். அவர்களது வருட சேவை பட்டியலில் இந்த இப்தார் மட்டும் தான் வரும். இதன் மூலம் இயக்கத்தின் அல்லது சங்கத்தின் பெயரை மக்களுக்கு ஞாகபகப்படுத்தி விடுவர். இப்படியாரு இயக்கம் அல்லது சங்கம் இருக்கிறது என்பத அப்போது தான் மக்களுக்கு ஞாபகம் வரும். இதை முடித்து பின் தூங்கத் தொடங்கினால் மீண்டும் அடுத்த வருட நோன்பு வந்த பின் மீண்டும் ஒரு தினம்.

இதைவிட இன்னொரு விஷேடமான ஒரு நிகழ்வு எமது நாட்டில் நடக்கிறது. எம்மவர் ஒருவர் தனது பணத்தை இலட்சக் கணக்காக செலவளித்து எதாவது அரச நிறுவனம் நடத்துவது போல் ஒரு இப்தாரை நடத்துகிறது என்று கூறப்படும். ஆனால் செலவு எம்மவருடையதே. ஒன்றில் அரசியல்வாதி அல்லது செல்வந்தர் பணம். பெயா அரச நிறுவனங்களின் பெயர்.

அல்லது ஏதாவது ஒரு கட்சி நடத்தும் இப்தார் என்பார்கள். அல்லது கட்சியன் தலைவர் நடத்துவதாக விளம்பரம் செய்வர். மக்களும் இதனை பெரிதாக மதிப்பர். அந்தக் கட்சிக்காரர்கள் அதனை ஒரு சேவையாக மதிப்பர். இதனை கூறி அந்தக் கட்சிக்கு ஆதரவையும் திருப்புவர். ஆனால் முழுப் பணச் செலவும் எமது செல்வந்தர்களது ஆக இருக்கும். எமது முஸ்லிம் செல்வந்தர்கள் அரசியல் பிரமுகர்கள் இந்த செலவை ஏற்கின்றனர். அதற்குரிய புகழை ஒரு சதமேனும் செலவழிக்காத இந்த இப்தார் பற்றிய அறிவும் தெளிவும் நோக்கம் இல்லாது வேறுற்று மதத்தவர் பெற்றுக் கொள்கின்றனர்.

மாநகரச் சபை இப்தார் என்கிறார்கள். ஆளுனர் அலுவலகம் என்கிறார்கள். இவற்றில் ஓரிரண்டு அரசாங்க செலவில் இருக்கலாம். ஆனால் அநேகமானவை எமது முஸ்லிம்களின் பணத்தால் செய்யப்படுவனவாகும்.

கடந்த வருடங்களில் ஒரு மாநகர சபையின் இப்தாருக்கும் ஆளுனா அலுவலகமொன்றின் இப்தாருக்கு நான் அழைக்கப்பட்டு சென்றேன். அங்கு சென்று பார்த்த பின்னர் உண்மை தெரிய வந்தது. அங்கு எம்மவர்களே ஏற்பாட்டாளர்களாக ஓடியாடி வேலை செய்து கொண்டிருந்தனர். அழைப்பாளர்களானவும் இருந்தனர். அரச நிறுவன அதிகாரிகள் அதிதிகளாக அழைப்பாளராக வந்திருந்தனர். இப்தார் நிகழ்வுகள் அதிகாரிகள் உடனே சென்று விட்டனர். எம்மவர்கள் துப்பறவு செய்யும் வேலைகளில் ஈடுபட்டுக் கொண்டிருந்தனர்.

இன்னும் சில எம்மவர்கள் பாரிய செலவில் பல ஆயிரம் பேரை அழைத்து பள்ளிவாசல்களில் அல்லது மண்டபங்களில் இப்தார் நடத்துகின்றனர். இதற்கு சில அரசியல் கட்சிகளின் தலைவர்களை அழைக்கின்றனர். அந்தக் கட்சி தலைவரிடம் இடம் பிடிப்பதும் தனது ஆதரவைக் காட்டுவதும் இவர்களது நோக்கமாகும்.

நோன்பு துறக்க வைப்பது இஸ்லாத்தைப் பொறுத்த வரை நன்மை தரும் செயலாகும். ஆனால் அதை நலல் நோக்கில் செய்ய வேண்டும். பெரும் விழாவாக எடுத்து மற்றவருக்கு காட்டுவதற்கு செய்வதாயின் பயனில்லை. அது மட்டுமல்ல பயனுள்ளதாக செய்ய வேண்டும்.

சில குடும்பங்கள் நோன்பு பிடிக்க வசதியின்றி கஷ்டப்படுகின்றனர். அதற்கான உணவை தயாரித்துக் கொள்ளவே வசதி இல்லாதவர்கள் இருக்கின்றனர்.

இப்தார் நிகழ்வை பல இலட்சங்கள் செலவளித்து செய்த வேறு எவருக்காவது புகழை தேடிக் கொடுப்பவாகள் அந்தப் பணத்தின் மூலம் பல குடும்பங்கள் முழு மாதத்திற்கும் நோன்பு பிடிக்கத் தேவையான உணவுப் பொருட்களை அன்பளிப்புச் செய்யலாம்.

ஒரு வெளிநாடொன்று இம்முறை இப்தார் நிகழ்வுகளை விழாவாக எடுப்பதை தடை செய்துள்ளதை ஊடகங்கள் மூலம் அறியக் கிடைத்தது. முஸ்லிம் நாடுகள் சில வறுமையில் கஷ்டப்படுவதால் இந்த ஆடம்பர இப்தார் வேண்டாம் என்று அந்த நாடு அறிவித்துள்ளது.

எமது நாட்டில் ஆயிரக் கணக்கான குடும்பங்கள் வறுமையில் கஷ்டப்படும் போத நாம் இதனை ஏன் சிந்திகக் கூடாது. இப்தார் என்ற பெயரில் மில்லியன்களை செலவளிக்கும் எம்மால் இந்த ஏழைக் குடும்பங்கள் நோன்பு பிடிக்க உதவலாமே. ஒரு மாதத்திற்கு தேவையான உணவுப் பொருட்களை எவ்வளவோ குடும்பங்களுக்கு வழங்கலாம். இந்த சிந்தனை எம்மிடம் வரவேண்டும். எங்களுக்கு கிடைக்கும் புகழ் பெயரைவிட அல்லாஹ்விடம் கிடைக்கும் நன்மை உயர்ந்ததல்லவா.

சில கிராமங்களில் சிறு இளைஞர் அமைப்புகள் நோன்பு ஆரம்பிக்கும் முன்னரே தேவையானவர்களைத் தேடி உலர் உணவுப் பொருட்களை விநியோகித்ததை நாம் கேள்விப்பட்டோம். இது பாராட்டத்தக்க விடயமாகும்.

தற்போது எமது நாட்டில் உள்ள வறுமை நிலையானது அடுத்த வருடமாகும் போது இரண்டு மடங்காகி விடும் என சர்வதேச நிறுவனங்கள் எமக்கு எச்சரிக்கை விடுத்துள்ளன. எனவே, நாமும் இந்தப் பாதிப்பினை அனுபவிக்க வேண்டி வரலாம்.

எனவே. நாம் எமது பாதையிலும் மாறற்ங்கள் ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். நல்ல நோக்கில் செயல்பட்டால் இது நல்லது எனப் புரியும். இந்த நோன்பு முடிந்து வருகிறது. எனவே அடுத்த வருட நோன்பில் இன்ஷா அல்லஹ் மக்களுக்கு பயனுள்ள வழியில் எங்களது சேவைகளைச் செய்வொம். பெருமையையும், புகழையும் மக்களிடம் சேர்க்காது அல்லாஹ்விடம் பெறுவோம்.

## மனநலமும் ஆலோசனையும்

29

# “பெற்றார்களே...... இது உங்களுக்கு......”

**O/L பரீட்சை எழுதும் மாணவர்களின் பெற்றார்களே......**

எமது பிள்ளைகள் பரீட்சைக்கு முகம்கொடுக்கும் போது பெற்றோர்களாக நாம் நடந்துகொள்ள வேண்டிய சில வழிமுறைகளை உங்கள் கவனத்திற்கு தருகின்றோம்.

அவற்றை பின்பற்றி பிள்ளையின் உள உடல் ஆரோக்கியத்தை மேம்படுத்தி ஊக்கமும் உற்சாகமும் வழங்கி பரீட்சைக்கு தைரியமாக முகம் கொடுக்க வழிகாட்டலாம்.

**அமைதியாக பேசுவோம்**

“பிள்ளையுடன் பேசும் போது அவசரப்படாமல் அமைதியாக பேசுவோம்.

பெற்றாரின் வார்த்தைகள் மிகவும் சக்திவாய்ந்தவை. ஊக்கம் தரும் வகையில் அழகான வார்த்தைகளை பேசுவோம்.

அவர்கள் ஏதேனும் சொல்ல வந்தால் நாம் அமைதியாக செவிமடுப்பதை பிள்ளைக்கு உணர்த்துவோம்.

நமது தடுமாற்றத்தை அல்லது டென்ஷனை அவர்களிடம் காட்டாதிருப்போம்..

**கோரிக்கைகளை தவிர்த்துக் கொள்வோம்**

“நீ எப்படியோ சித்தியடைய வேண்டும் என்றோ, நீ சித்தியடைவது தான் எங்கள் எதிர்பார்ப்பு என்றோ, அல்லது

சித்தியடைய வேண்டும் என்பதற்காக ஏதாவது முறையில் வேண்டுகோள்கள், அழுத்தங்கள் கொடுப்பது நல்லதல்ல. ஏற்கனவே அழுத்தங்களால் அவதிப்படும் பிள்ளைகளுக்கு ஆறுதல் அளிப்பவர்களாக நாம் இருக்க வேண்டும். இந்த நேரத்தில் நாம் இளகிய மனமுடையவராக இருந்து பிள்ளையை எமது அழகான வார்த்தைகள் மூலம் நெகிழ்வு படுத்துவோம்...

பரீட்சை நாட்களில் நீண்ட நேரத்தை படிப்பில் செலவிடுவதை குறைத்து பிள்ளை ஓய்வாக இருப்பதும் முக்கியம் என்பதையும் புரியவைப்போம்.

**மனச்சோர்வை புரிந்து கொள்வோம்**

பிள்ளை பரீட்சை பற்றி மனச்சோர்வாக இருக்கக் காணும் போது அதை புரிந்துகொண்டு அவசரப்பட்டு பொருத்தமற்ற எதனையும் சொல்லிவிடாமல்,

– பிள்ளை செய்வது அவருக்குப் போதுமானது என்பதை தெரியப்படுத்துவோம்..

– மற்றவர்களுடன் போட்டியிடுவதற்காக நீங்கள் படிப்பதில்லை,

உங்கள் திறமையை வெளிப்படுத்தவும் அதை காணவுமே படிக்கிறீர்கள் என்று எடுத்துக்கூறுவோம்.

**நேர்மறையான எண்ணங்களை உருவாக்க உதவுவோம்...**

நேர்மறையான சுய எண்ணங்களை உருவாக்கிக் கொள்ளுமாறு சொல்லிக் கொடுப்போம்..

உதாரணமாக......

– நான் தைரியசாலி..

– இந்தப் பரீட்சையில் நான் சிறப்பாக செயற்படுவேன்..

– நான் படித்திருக்கிறேன்..

– எனக்கு பதில்கள் தெரியும்..

– என்னால் தைரியமாக பரீட்சைக்கு முகம் கொடுக்க முடியும்..

என்று சொல்லுமாறு சொல்லிக் கொடுப்போம்.

– ”நல்ல சிந்தனையால் மட்டுமே வெற்றியாளராக ஆகமுடியும்”.. அதனால்

– “என்னால் முடியும்“

– “நான் சாதிப்பேன்“

என்ற எண்ணங்களை மனதிற்கு கொண்டுவருமாறு எடுத்துக்கூறலாம்.

**ஒப்பிடுவதை தவிர்த்துக் கொள்வோம்..**

பிள்ளையை மற்றப் பிள்ளைகளோடு ஒப்பிடுவதை முற்றாக தவிர்த்துக் கொள்வோம். பிள்ளைக்கும் தன்னை எந்தப் பிள்ளையுடனும் ஒப்பிட்டுப்பார்க்க வேண்டாம் என்பதையும் எடுத்துச் சொல்வோம்.

மற்ற பிள்ளைகள் எப்படிச் செய்வார்கள் என்று எண்ணுவதை விட்டுவிட்டு, உங்கள் திறன்கள் மீது அவதானம் செலுத்துங்கள் என்று சொல்லிக் கொடுப்போம்..

**கவலைப்படத் தேவையில்லை என்பதை உணர்த்துவோம்...**

“பரீட்சை பற்றி அதிகம் கவலைப்படத் தேவையில்லை. நீங்கள் எதிர்பார்த்த அளவு அதிகம் செய்ய முடியாவிட்டால் நீங்கள் உங்களையே சங்கடப்படுத்திக்கொள்ள வேண்டியதுமில்லை. ஆனால் இப்போது கிடைத்திருக்கும் இந்தச் சந்தர்ப்பத்தை பயன்படுத்தி உங்களால் முடிந்தவரை முழுமையாகச் செய்ய முயற்சியுங்கள்... என்று கூறலாம்.

**உறக்கமும் ஓய்வும்**

இக்காலத்தில் பிள்ளைக்கு உறக்கமும் ஓய்வும் கட்டாயம் தேவை. பூரணமான உறக்கத்திற்கு நேரத்தை ஒதுங்கிக் கொடுப்போம். பிள்ளைக்கு 7-8 மணித்தியாலம் உறக்கம் அவசியமாகும். அழகாக ஆரோக்கியமாக உறங்கினால் அடுத்த நாளில் உடலும் உள்ளமும் சுறுசுறுப்பாக இயங்கும் என்பதை இரவில் நினைவு படுத்துவோம்.

உறக்கம் போன்று பூரணமான உணவும் பிள்ளைக்குத் தேவை. போசணை உணவு உடல் வளர்ச்சிக்கு மட்டுமன்றி சிந்தனை வளர்ச்சிக்கும் கட்டாயம் தேவைப்படுகிறது என்பதை சொல்லிக்கொடுத்து உணவு உட்கொள்ள ஊக்குவிப்போம்.

பிள்ளையின் தலை தடவி பிரார்த்திப்போம்... அது பிள்ளைக்கு நம்பிக்கையை கொடுக்கும்.

பெற்றாரின் அணைப்பும் பிரார்த்தனையும் மிகவும் பலமானவை என்று நாம் அறிவோம்...

சவால்கள் பலவற்றை சந்தித்து பரிட்சை எழுதும் உங்கள் பிள்ளைகள் எதிர்காலத்தில் சவால்களை சமாளிக்கக்கூடிய வல்லவர்களாக ஆகுவார்கள்.

உங்கள் பிள்ளைகள் மனதைரியத்துடன் பரீட்சைக்கு முகம்கொடுக்க வேண்டும் என்று நாமும் மனம் திறந்து பிரார்த்தனை செய்கிறோம்...



**அஸ்ஹர் அன்ஸார் FRSPH (UK)**
**மனோதத்துவ ஆலோசனை நிபுணர்**
**மனோதத்துவ எழுத்தாளர்**

---




# சுவர்களில் உருவாகும் சுவர்க்கங்கள் கவிதை நூலின் அறிமுக நிகழ்வு



**நாச்சியாதீவு பர்வீன்**

அஷ்ரஃப் சிஹாப்தீன் அவர்கள் நாடறிந்த கவிஞர், மொழி பெயர்ப்பாளர், பத்தி எழுத்தாளர், பன்னூ லாசிரியர் 1978ம் ஆண்டுமுதல் இவர் இலக்கியப் பணி செய்து வருகின்றார். காணாமல் போனவர்கள், உன்னை வாசிக்கும் எழுத்து, என்னைத் தீயில் எறிந்தவள், தீர்க்க வர்ணம், ஶ்ரீலங்காவிலிருந்து ஸ்ரீரங்கப்பட்டணம்வரை, ஒரு குடம் கண்ணீர், விரல்களற்றவனின் பிரார்த்தனை, ஒரு சுறங்கைப் பேரீச்சம்பழங்கள், பட்டாம்பூச்சிக் கனவுகள், யாரும் மற்றொருவர் போலில்லை, தேவதைகள் போகும் தெரு, எனக்குள் நகரும் நதி, வெய்யில் மனிதர்கள், நான் இன்னும் உயிர்ப்புடன் இருக்கிறேன் ஆகியன இவரது முன்னைய நூல்களாயிருப்பதுடன் யாத்ரா சஞ:சிகையின் ஆசிரியரும் ஆவார். இலங்கை வானொலி முஸ்லிம் சேவையில் பிரதி ஞாயிற்றுக் கிழமைகளில் இரவு 8.15 மணிக்கு தான் தொகுத்து வழங்கும் கவிதாநதி நிகழ்ச்சியில் இளம் கவிஞர்களுக்கு தொடர்ந்தும் வாய்ப்பளித்து வருகிறார். தமிழியல் விருது, தமிழ் மாமணி விருது, மகரந்தச் சிறகு விருது, கலாபூசன விருது இவற்றுடன் தேசிய சாகித்ய விருதுகள் பலவற்றையும் பெற்றுள்ள இவர் ஓர் ஆசிரியராகவும், திணைக்கல அதிகாரியாகவும், ஒரு அமைச்சரின் இணைப்புச் செயலாளராகவும் தொழில் ரீதியாகச் செயற்பட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

இவ்வாறு பன்முக ஆளுமை கொண்ட அஷ்ரஃப் சிஹாப்தீன் அவர்கள் எழுதிய சுவர்களில் உருவாகும் சுவர்க்கங்கள் கவிதை நூலின் அறிமுக நிகழ்வு கடந்த (28.04.2024) ஞாயிறு காலை 9.45 மணியளவில் தர்கா நகர் ஸாஹிறாக் கல்லூரி நளீம் ஹாஜியார் மண்டபத்தில் நடைபெற்றது. இவ்வறிமுக விழாவை பேருவளைப் பிராந்திய எழுத்தாளர் ஒன்றியம் ஏற்பாடு செய்திருந்தது.

இத்தொகுப்பில் அஷ்ரஃப் சிஹாப்தீன் அவர்கள் எந்தவிதப் புதுமையோ அல்லது வித்தியாசத்தையோ செய்யவில்லை. நடைமுறைப் பாவனையில் உள்ள சாதாரண சொற்களைக் கொண்டே கவித்துவம் பொங்கும் அனைத்துக் கவிதைகளையும் படைத்துள்ளார். இதனால் இத்தொகுப்பை ஒரு சாதாரண வாசகனாலும் இலகுவில் வாசித்து விளங்கிக் கொள்ளக் கூடியதாய் உள்ளது. சுவர்களில் உருவாகும் சுவர்க்கங்கள் தொகுப்பானது 102 பக்கங்களில் 51 கவிதைகளையும் 8 குறும்பாக்களையும் தன்னகத்தே கொண்டுள்ளது. அவை அனைத்தும் கடந்தகால வாழ்வில் தான் கண்ட அனுபவங்களின் பதிவுகளே என்கிறார் அஷ்ரஃப் சிஹாப்தீன் அவர்கள்.

இந்நூல் அறிமுக நிகழ்விற்கு பேருவளைப் பிராந்திய எழுத்தாளர் ஒன்றியத்தின் பொருளாளர் கவிஞர் தர்கா நகர் ஸபா அவர்கள் தலைமை தாங்கினார்.

ஸாஹிறாக் கல்லூரி மாணவன் எம். எப். ஏ. அஸ்மத் கிராத் ஓதி நிகழ்வை ஆரம்பித்து வைத்தார். அதனைத் தொடரர்ந்து தலைமையுரை இடம்பெற்றது. பின்பு பேருவளைப் பிராந்திய எழுத்தாளர் ஒன்றியத்தின் தலைவர் றபீஸ் ஹம்ஸ ா வாழ்த்துரை வழங்க, விஸ்டம் சர்வதேச பாடசாலையின் இஸ்தாபகர் எம். எம். எம். பௌஸர் நளீமி வாழ்த்துக் கவிதை பாடினார்.

அதனைத் தொடர்ந்து சுவர்களில் உருவாகும் சுவர்க்கங்கள் நூலின் முதல் இரு பிரதிகள் வெளியிட்டு வைக்கப்பட்டன. பிரதிகளை எழுத்தாளர், மொழிபெயர்ப்பாளர், ஓய்வுபெற்ற கல்வி நிர்வாக சேவை உத்தியோகத்தர், பன்னூலாசிரியர் ஹாபிஸ் இஸ்ஸதீன் அவர்கள் வெளியிட்டுவைக்க முதற் பிரதியை னுச. ரூமி ஹாஷிம் பவுண்டேசன் நிறுவுநர்ஃதலைவர், அரச மருந்தாக்கற் கூட்டுத்தாபனத்தின் முன்னாள் தலைவர் கலாநிதி ரூமி ஹாஷிம் அவர்களும், இரண்டாவது பிரதியை கைநெ உரசநிாயசஅயஉநரவைஉயடள முகாமைத்துவப் பணிப்பாளர் னுச. ரூமி ஹாஷிம் கல்வி நிலையத்தின் செயலாளர் அல் ஹாஜ் ஜஸ°க் அஹமட் அவர்களும் பெற்றுக்கொண்டார்கள்.

கலாநிதி ரூமி ஹாஷிம் அவர்கள் விசேட சொற்பொழிவொன்றை நிழ்த்தியதுடன், ஜாமியா நளீமியா கலாபீடத்தின் சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி அரபாத் கரீம் அவர்கள் சிறப்புரை நிகழ்த்தினார்.

அதன் பின்னர் இலங்கைத் திறந்த பல்கலைக் கழக வருகைதரு விரிவுரையாளரும் அல் பாஸ ியத்துல் நஸ்ரியா பெண்கள் கல்லூரி ஆசிரியையுமான திருமதி ஸ/மையா ஷ ரிப்தீன், பேருவளைப் பிராந்திய எழுத்தாளர் ஒன்றியத்தின் செயலாளர் பஸ்லி ஹமீட் ஆகியோர் நூல் பற்றி விமர்சனம் செய்தனர்.

பின்னர் கவிஞர் அஷ்ரஃப் சிஹாப்தீன் அவர்களின் ஏற்புரை இடம்பெற்றதை அடுத்து பேருவளைப் பிராந்திய எழுத்தாளர் ஒன்றியத்தின் உப செயலாளர் திருமதி ஷஹாமா ஸனீர் அவர்களினால் நன்றியுரை நிகழ்த்தப்பட்டது.

இவ்வைபவத்தில் பங்கேற்ற பிரமுகர்கள் பலருக்கும் சிறப்புப் பிரதிகள் வழங்கி வைக்கப்பட்டன. அத்தோடு பிராந்தியத்தில் உள்ள நான்கு பாடசாலைகளின் நூலகங்களுக்கு அஷ்ரஃப் சிஹாப்தீன் அவர்களினால் ஒரு தொகைப் புத்தகங்களும் அன்பளிப்புச் செய்யப்பட்டன.

நிகழ்ச்சியை மக்கொனையைச் சேர்ந்த செல்வி அஸ்ஹா லாபிர் திறம்படத் தொகுத்து வழங்கினார்.

பேருவளைப் பிராந்திய எழுத்தாளர் ஒன்றியத்தின் உப தலைவர் ஐயூப் கான் நிகழ்வை அழகாகப் படம்பிடித்துத் தந்தார்.









---

## சமர் செய்ய விரும்பவில்லை

சமர் செய்ய விரும்பவில்லை
உன்னோடு,
சமரசத்திற்கு வா என்றுதான்
அழைக்கிறேன்.

அமர்ந்து உன்னுடன்
கொஞ்சம்
இளைப்பாறவே வந்திருக்கிறேன்,
அமர்க்களப்படுத்தி
அமைதியைக் கலைத்துவிடாதே!

திமிர் அடங்கிய காளையாய்
திருந்தி வந்திருக்கிறேன்,
நிமிர்ந்து பார்த்து
என்னை
நிலைகுலையச் செய்!

அமிழ்ந்துபோன பாராங்கல்லாய்
ஆசைகளை அடக்கி
வைத்திருக்கிறேன்,
சுமைக்கு மேல் சுமையேற்றி
இன்னுமென்னை
சோதித்துவிடாதே!

உமர்கயாமின் கவிதையாய்
உள்ளத்தில் உனை
உருவகித்து வைத்திருக்கிறேன்,
கமர் வந்த பூமியாய்
என்னிதயத்தை
காயப்படுத்திவிடாதே!

- மன்னூரான் ஷிஹார் -

# அன்றாட வாழ்வில் கலக்கவுள்ள Artificial intelligence


(ஹரீஸ் ஸாலிஹ்)


காலத்துக்கு காலம் தொழிநுட்பம் மாறிக்கொண்டே வருகிறது. கற்காலம், வெண்கல காலம், இரும்பு காலம் என மனிதன் முன்னேறி கொம்பியூட்டர் யுகத்தையும் தாண்டி இப்போது செயற்கை நுண்ணறிவு Artificial intelligence (AI) யுகத்தை வந்தடைந்துள்ளோம்.

இன்று நாம் வாழ்ந்து கொண்டிருக்க கூடிய இந்த யுகத்தில் செயற்கை நுண்ணறிவின் தாக்கம் மிகவும் கணிசமான அளவில் எமது வாழ்க்கையில் தாக்கம் செலுத்தி உள்ளதை காண்கிறோம்.அதாவது இன்று உலகில் காணப்படக்கூடிய அனைத்து துறைகளிலுமே இந்த செயற்கை நுண்ணறிவின் பிரயோகம் மற்றும் பங்கு பற்றுதல் இருப்பதனை காண முடிகின்றது. கல்வி, சுகாதாரம், பொருளாதாரம், அரசியல், விவசாயம், வர்த்தகம், வியாபாரம், சந்தைப்படுத்தல், நிதி , வங்கி, காப்புறுதி, வினோதம், சுற்றுலா, போக்குவருத்து என அனைத்து துறைகளிலும் இந்த AI தொழிநுட்பம் இணைக்கப்பட்டுள்ளது. ஒரு காலத்தில் கையால் செய்த வேலைகளை பிறகு இயந்திரங்களுக்கு வழங்கினோம். இப்போது கொம்பியூட்டர்களும் , ரோபோக்களும் செயற்கை நுண்ணறிவை பயன்படுத்தி எமது காரியங்களை படு வேகத்தில் செய்து கொண்டிருக்கின்றன.

இன்று பல தொழில்கள் இந்த யுஐ தொழிநுட்பம் கைப்பற்றி விட்டது. ஊயடட உநவெநச, சுநஉநிவழைளைவ , உழஅந னநடைளைநசல போன்றன அவற்றுள் சில. சாரதி இல்லாமல் தானாக இயங்கும் Self-driving car/ Autonomous car (AC)> Driverless car> Robotaxi> Robotic car> Robo-car என்று அழைக்கப்படும் கார்கள் இதில் முக்கிய இடத்தை வகிக்கிறது.

"ளுஅயசவ உழஅந" எனும் எண்ணக்கரு மூலம் ஒருவரது வீட்டில் இருக்கும் கதவுப் பூட்டுகள், கேரேஜ் கதவுகள், குளிரூட்டிகள், கமெராக்கள், டீவிக்கள் , குளிர்சாதனப்பெட்டிகள், சமையலறை உபகரணங்கள் போன்ற பல்வேறுபட்ட IoT (Internet of Things) உபகரணங்களை இன்டர்நெட் தொடர்பு மூலம் உலகில் எந்த ஒரு மூலையில் இருந்து கொண்டும் உங்களது Smart Watch, Smart Phone அல்லது வுயடிடநவ ஐப் பயன்படுத்தி இயக்கலாம், அவதானிக்கலாம். கட்டுப்படுத்தலாம். Amazon, Apple, Google ஆகிய நிறுவனங்களது "Smart Home






Environment" பாவணைக்கு வந்து பல வருடங்கள் ஆகி விட்டன. உங்களில் பலரும் Alexa, Siri, Google assistant, Cortana போன்றோர்களுடன் தொடர்பை ஏற்படுத்திக் கொண்டிருப்பீர்கள்!

சாதாரண ஒரு "Smart Phone" வைத்துள்ள நீங்கள் இதுவரை Alexa, Siri, Google assistant, Cortana போன்ற Artificial Intelligence (செயற்கை நுண்ணறிவு) தொழிநுட்பத்துடன் உங்களை தொடர்பு படுத்திக் கொள்ளாதவராக இருந்தால் கீழ் உள்ள இந்த App களை உங்களது App Store இலிருந்து download செய்து உங்களது தினசரி வாழ்க்கையில் Artificial Intelligence தொழிநுட்ப உதவியை, வழி காட்டல்களை பெற்றுக்கொண்டு பயணியுங்கள்.

1-Microsoft Copilot
2-ChatGPT
3-Gemini.google.com

விஷேடமாக மாணவர்களுக்கு கல்வியுடன் தொடர்பான கேள்விகளுக்கு பதில் பெற்றுக்கொள்ள, உங்களுக்கு தேவையான உருவங்களை, டிசைன்களை வடிவமைத்துக்கொள்ள, நவீன தொழிநுட்பங்களை, செய்திகளை, உலக நடப்புக்களை கேட்டு விசாரித்துக்கொள்ள அவைகள் பற்றி பகுப்பாய்வு செய்ய இவை மிகவும் இன்றியமையாதவை. அதே போல் சமையலல் குறிப்புக்கள், உடல் பயிற்சி, விளையாட்டு, உங்களது விடுமுறைகளை திட்டமிடுவது போன்ற இன்னோரன்ன கேள்விகளுக்கும் சிறந்த ஆலோசனைகள இலவசமாக பெற்றுக்கொள்ளலாம். உங்களது வேலைகளை செய்து கொண்டே (பிரயாணம், சமைத்தல், துணி துவைத்தல், நடத்தல் ...) இந்த யுஐ யளளளைவயவெ களுக்கு செவி சாய்க்கலாம். கேள்விகளை கேட்கலாம்.

சந்திரன் பற்றி, செவ்வாய் கிரகம், கிரகங்கள் பற்றி அன்று இருந்த மூட நம்பிக்கைகள் அவற்றுக்கு சென்று ஆராய்ச்சிக்களை மேற்கொண்டதுடன் மறைந்து விட்டன. இப்போது அன்றைய நிலை மாறி அங்கு சென்று கால் பதிக்க நாட்டுக்கு நாடு போட்டிகள் நடந்து கொண்டிருக்கின்றன. மூட நம்பிக்கைகளுக்கு சரியான மருந்து நவீன தொழிநுட்பங்களே!

தொழில்நுட்பத்தில் முன்னேறி இருக்கும் நாடுகள் இன்று உலகில் ஆதிக்கம் செலுத்திக் கொண்டிருக்கின்றன. ஒரு சமூகத்தின் வெற்றியும் தோல்வியும் அதனிடம் இருக்கும் தொழிநுட்பத்தில் தங்கி இருக்கிறது என்பதனை எமது தோல்விகள் எமக்குக் கற்றுத்தந்து கொண்டிருக்கின்றன. எதிர்காலத்தில் என்ன நடக்கப் போகிறது என்பது எங்களுக்குத் தெரியாது, ஆனால் Artificial intelligence மற்றும் Machine Learning ஆகிய அதி நவீன துறைகள் மக்களின் வாழ்க்கைத் தரத்தை, வாழ்க்கை முறையை மேம்படுத்துவதற்கான சிறந்த ஆற்றல்களைக் கொண்டுள்ளன என்பது நன்கு தெரிகிறது.




## செய்வதை விரும்பிச் செய்தால்...!

சின்ன வயதுகளில் எமது எதிர்கால இலட்சியம் பற்றிக் கேட்டால்...,

பல வகைப்பட்ட விடயங்கள் ஒவ்வொருவராய் சொல்லிக் கொள்வோம்.. அவ்வாறு சொல்லப்பட்ட விடயங்கள் உண்மையிலே வாழ்க்கையில் நடப்பதென்பது மிகச் சொற்பமே..

வாழ்க்கை, நாம் விரும்புவதை அப்படியே தந்து விடாது..

கொஞ்சம் ஏற்றம் இறக்கம் , வெற்றி தோல்வி என பல வகையறாக்களை அள்ளித் தரும். நாம் அதனை ஏற்கத்தான் வேண்டும். அவற்றையெல்லாம் கடந்து தான் வாழ்ந்தாக வேண்டும்.. விரும்புபவை கிடைப்பது அரிது. அதனால் கிடைப்பவற்றை விரும்பினால் வாழ்க்கை சிறப்பாகும்..

செய்யும் செயற்பாடுகள் எதுவாகினும் அதனை ஏற்று விரும்பிச் செய்வது எமக்கும் எமது உள்ளத்திற்கும் மிகுந்த திருப்தியைத் தரவல்லது.

செய்வதை விரும்பிச் செய்யுங்கள்...!!

நீங்களும் சந்தோஷப்படுவீர்கள்...!!

## உங்களால் கொடுக்கக் கூடிய அதிசிறந்த அன்பளிப்பு எது தெரியுமா...???

இவ்வாறான கேள்வியொன்றைக் கேட்டால் ஒவ்வொருவரும் தத்தம் பதில்களைச் சொல்வார்கள்.. அவர்களால் முடிந்தளவு முயற்சிப்பார்கள்.

ஆனால்.,

அதிகூடிய பெறுமதி வாய்ந்தது , நிகரில்லாதது எது தெரியுமா..??

அன்பு மட்டும் தான்.

அதனால் தானே...

"அன்பிற்குமுண்டோ அடைக்குந் தாழ்" என்று கூறியுள்ளார்கள்..

அன்பை வெல்ல பிற எதுவாலும் முடியாது. உங்கள் கைகளில் எதுவும் இல்லாத போதும் அன்பால் பிறர் மனம் குளிர இரண்டு வார்த்தைகள் பேசிப் பாருங்கள்.. அங்கே அன்பின் வெளிப்பாடு முக மலர்ச்சியான செயற்பாடாகத் தான் இருக்கும். நிச்சயம் உங்கள் உள்ளமும் திருப்தியடையும்..

அன்பிற்கு அவ்வளவு சக்தியிருக்கின்றது. கொடுத்துப் பாருங்கள்.. நிச்சயம் மிக அதிகமாகவே உங்களுக்கும் திரும்பவும் கிடைக்கும்.. அன்பிற்காக எதையும் இழக்கலாம்... ஆனால்., எதற்காகவும் அன்பை இழைந்துவிடக் கூடாது.

பணமோ பொருளோ செய்ய முடியாத மாற்றத்தை அன்பு செய்யும்.. அன்பு நிச்சயம் வெல்லும்.. கல்லுப்போன்ற உள்ளம் கொண்டவர்களையும் கரைய வைக்க அன்பால் மட்டுமே முடியும்..

முயற்சித்துப் பாருங்கள்..

நிச்சயம் வியந்து போவீர்கள்..

அன்பு அழகானது..

அன்பு ஆழமானது..

அன்புடன்,

இவள்.,








அல் – ஹுமைஸரா அஹதிய்யாப் பாடசாலையின் பரிசளிப்பு விழா கடந்த ஞாயிறு (28) ஜாபிர் ஹாஜியார் நினைவு மண்டபத்தில் நடைபெற்றது. அல்–ஹுமைஸரா அஹதிய்யாவின் அதிபர் அஷ்ஷெய்க் ஸப்வான் ஆரிபின் வழிகாட்டுதலில் சீனன் கோட்டை பள்ளிச்சங்க தலைவர் முக்தார் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில், மாணவர் தலைவர் பதவியேற்பு, ரமழான் கேள்வி – பதில் திறந்த போட்டியில் வெற்றி பெற்ற மற்றும் ரமழான் ஆன்மீக பயிற்சி நெறியில் கலந்து கொண்ட மாணவர்களுக்கான சான்றிதழ்கள் மற்றும் பரிசில்கள் என்பன வழங்கப்பட்டதோடு, மாணவர்களின் நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன. நிகழ்வில் ஜாமிஆ நளீமிய்யா கலாபீட முதல்வர் அஷ்ஷெய்க் அகார் முஹம்மத் பிரதம அதிதியாகவும், அமானா வங்கியின் பிரதம உள்ளக கணக்காய்வாளர் ஏ.ஸி.எம் நுமைர் காஸிம் மற்றும் முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் கலாசார அபிவிருத்தி அதிகாரி முப்தி முர்ஸி ஆகியோர் கௌரவ அதிதிகளாகவும், விஷேட அதிதிகளாக அஹதிய்யா மத்திய சம்மேளனத் தலைவர் மற்றும் அமானா வங்கியின் பேருவளைக் கிளை முகாமையாளர் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.

(எம்.எஸ்.எம்.ஸாகிர்)



அரபாத் பஹுர்தீன்

# தேசிய சுப்பர் லீக் டெஸ்ட் தொடர் கண்டியை வீழ்த்தி சம்பியனானது காலி

இலங்கை கிரிக்கெட் சபையின் ஏற்பாட்டில் நடைபெற்றுவந்த தேசிய சுபர் லீக் நான்கு நாள் டெஸ்ட் போட்டித்தொடரின் இறுதிப் போட்டியில் கண்டி அணியை 7 விக்கெட்டுக்களால் மிக இலகுவாக வீழ்த்தி சம்பியனாக முடிசூடியது காலி அணி.

இலங்கை கிரிக்கெட் சபையின் பிரதான ஏற்பாட்டில் இடம்பெற்ற நான்கு நாள் டெஸ்ட் போட்டியின் தேசிய சுபர் லீக் தொடரின் இறுதிப் போட்டியில் லசித் எம்புல்தெனிய தலைமையிலான கண்டி அணியும் ரமேஷ் மெண்டிஸ் தலைமையிலான காலி அணியும் கண்டி பல்லேகலே மைதானத்தில் பலப்பரீட்சை நடாத்தின.

இப்போட்டியின் முதல் இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிய கண்டி அணி சித்தார கிம்ஹான (90), சஹான் கோஷல (84) மற்றும் அஷைன் டேனியல் (50) ஆகியோரின் அரைச்சதங்களின் உதவியுடன் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 316 ஓட்டங்களை குவித்தது. பந்துவீச்சில் அசங்க மனோஜ் 3 விக்கெட்டுகளை வீழ்த்தினார்.

பின்னர் தமது முதல் இன்னிங்ஸை ஆரம்பித்த காலி அணி சார்பில் அணித்தலைவரான ரமேஷ் மெண்டிஸ் தனி ஆளாய்ப் போராடி அசத்தல் சதத்தை பதிவு செய்து 111 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுக்க அவ்வணியால் 304 ஓட்டங்களை பெற முடிந்தது. பந்துவீச்சில் சிதும் திசாநாயக்கஇ நிம்ஷார அதரகல்ல மற்றும் லசித் எம்புல்தெனிய ஆகியோர் தலா 3 விக்கெட்டுகளை வீழ்த்தினர்.

பின்னர் 12 ஓட்டங்கள் முதல் இன்னிங்ஸ் முன்னிலையுடன் தமது 2ஆவது இன்னிங்ஸை ஆரம்பித்த கண்டி அணியால் நிலைத்திருந்து ஓட்டங்களை சேர்க்க முடியாமல் 163 ஓட்டங்களுக்கு சகலவிக்கெட்டுக்களையும் இழந்தது. துடுப்பாட்டத்தில் அதிகபட்சமாக ரவீன் யஷஸ் 45 ஓட்டங்களையும், புலின தரங்க 43 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் நிஷான் பீரிஸ் 5 விக்கெட்டுகளை வீழ்த்தினார்.

பின்னர் 178 என்ற வெற்றியிலக்கை நோக்கி துடுப்பெடுத்தாடிய காலி அணிக்கு ஓஷத பெர்னாண்டோ ஆட்டமிழக்காமல் 77 ஓட்டங்களையும், லக்ஷித எதிரிசிங்க 56 ஓட்டங்களையும் பெற்றுக்கொடுக்க 3 விக்கெட்டுக்களை மாத்திரம் இழந்து 178 ஓட்டங்களைப் பெற்று 7 விக்கெட்டுக்களால் இழகு வெற்றியைப் பதிவு செய்து நடப்பாண்டின் சம்பியன் கிண்ணத்தை தனதாக்கியது காலி அணி.






# மொஹமட் சிராஸின் வேகத்தால் ஒருநாள் தொடர் இலங்கை ஏ அணி வசமானது



சுற்றுலா ஆப்கானிஸ்தான் ஏ அணிக்கு எதிரான தீர்மானமிக்க 3ஆவது ஒருநாள் போட்டியில் மொஹமட் சிராஸின் வேகத்தினாலும், பசிந்து சூரிய பண்டாரவின் துடுப்பாட்டத்தினாலும் 4 விக்கெட்டுக்களால் வெற்றி பெற்ற இலங்கை ஏ அணி தொடரின் இரு போட்டிகள் மீதமிருக்க 3:0 என தொடரை தனதாக்கியது.

இவ்விரு அணிகளுக்கும் இடையிலான 5 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடர் ஹம்பந்தோட்டை மஹிந்த ராஜபக்ஷ சர்வதேச கிரிக்கெட் மைதானத்தில் இடம்பெற்றுவருகின்றது. இதில் முதல் இரு போட்டிகளிலும் இலங்கை ஏ அணி வெற்றி பெற்று தொடரில் 2:0 என முன்னிலை பெற்றிருந்தது. இந்நிலையில் நேற்று முன்தினம் (3) தீர்மானமிக்க 3ஆவது போட்டி இடம்பெற்றது.

இப்போட்டியின் நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய ஆப்கானிஸ்தான் ஏ அணி முஹமட் சிராஸின் வேகத்தில் நிலைகுலைந்து போய் 41.2 ஓவர்களில் 185 ஓட்டங்களுக்குள் சுருண்டு போனது. துடுப்பாட்டத்தில் ஜிஆ-உர்-ரஹ்மான் அதிகபட்சமாக 35 ஓட்டங்களை பெற்றார். பந்துவீச்சில் மொஹமட் சிராஸ் 6 ஓவர்களில் 31 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுகளை கைப்பற்றி அசத்தினார்.

பின்னர் 186 ஓட்டங்கள் என்ற வெற்றி இலக்கினை நோக்கி பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய இலங்கை ஏ அணிக்கு பசிந்து சூரியபண்டார 84 ஓட்டங்களை ஆட்டமிழக்காமல் பெற்றுக் கொடுக்க, 37.3 ஓவர்களில் 6 விக்கெட்டுகளை இழந்து 186 ஓட்டங்களைப் பெற்று 4 விக்கெட்டுக்களால் வெற்றி பெற்றதுடன், இரு போட்டி மீதமிருக்க தொடரை 3:0 என கைப்பற்றி அசத்தியது. பந்துவீச்சில் மொஹமத் சலீம் 3 விக்கெட்டுகளை வீழ்த்தியமை குறிப்பிடத்தக்கது.

## ஆசிய ரக்பி ஆடவர் பிரிவு 1 சம்பியன்ஷிப் தொடர்:

# கஸகஸ்தானை மண்டியிடவைத்து மகுடம் சூடியது இலங்கை




ஆசிய ரக்பி ஆடவர் பிரிவு 1 சம்பியன்ஷிப் - 2024 தொடரின் இறுதிப் போட்டியில் பலமிக்க கஸகஸ்தான் அணியை 45:07 என்ற புள்ளிகள் அடிப்படையில் மிக இலகுவாக வீழ்த்திய இலங்கை அணி சம்பியன் பட்டத்தினை வெற்றி கொண்டு அசத்தியது.

இலங்கை , கத்தார், கஸகஸ்தான் மற்றும் இந்தியா ஆகிய நான்கு நாடுகள் பங்கேற்ற ஆசியா ரக்பி ஆடவர் பிரிவு 1 சம்பியன்ஷிப் தொடரில் இரு அரையிறுதி ஆட்டம் மற்றும் இறுதிப் போட்டி என்ற அடிப்படையில் தொடரின் அட்டவணை அமைக்கப்பட்டிருந்தது. அதற்கமைய முதல் அரையிறுதிப் போட்டியில் கத்தார் அணி , கஸகஸ்தான் அணியை எதிர்த்து கடந்த 30ஆம் திகதி கொழும்பு ரேஸ் கோஸ் மைதானத்தில் பலப்பரீட்சை நடாத்தியது.

மிக விறுவிறுப்பாக இடம்பெற்ற இப்போட்டியில் இரு அணி வீரர்களும் அசத்தலான பந்துப் பரிமாற்றத்தை செய்து அசத்திய போதிலும் கஸகஸ்தான் அணி 33:31என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி பெற்று இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றது.

பின்னர் இடம்பெற்ற 2ஆவது அரையிறுதிப் போட்டியில் போட்டிகளை நடாத்தும் இலங்கை அணி , இந்திய அணியை எதிர்த்து விளையாடியது. இப்போட்டியின் முதல் பாதி ஆட்டத்தில் ஆக்ரோஷமிக்க ஆட்டத்தை வெளிப்படுத்திய இலங்கை அணி முதல் பாதியை 21:03 என்ற புள்ளிகளுடன் முன்னிலை பெற்றது. பின்னர் தொடர்ந்த 2ஆவது பாதி ஆட்டத்தில் தம் ஆதிக்கத்தை மேலும் வலுப்படுத்திய இலங்கை வீரர்கள் போட்டி முடிவில் 45:10 என்ற புள்ளிகள் கணக்கில் இலகு வெற்றியைப் பதிவு செய்து இறுதிப் போட்டிக்கான வரவை உறுதிப்படுத்தினர்.

இந்நிலையில் அரையிறுதியில் தோற்ற இரு அணிகளான கத்தார் மற்றும் இந்திய அணிகள் நேற்று (4) 3ஆம் இடத்துக்கான போட்டியில் பங்கேற்றனர். இப்போட்டியில் 34:25 என்ற புள்ளிகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்ற கத்தார் அணி 3ஆம் இடத்தை தனதாக்கிக் கொண்டது.

இப் போட்டியின் பின்னர் பிற்பகல் 6.45 மணிக்கு கொழும்பு ரேஸ்கோர்ஸ் மைதானத்தில் ஆரம்பித்த இறுதிப் போட்டியில் சமபலமிக்க இரு அணிகளான இலங்கை மற்றும் கஸகஸ்தான் அணிகள் பலப்பரீட்சை நடாத்தின. இப்போட்டியின் முதல் பாதி ஆட்டத்தை இலங்கை வீரர்கள் தமது பூரண கட்டுப்பாட்டில் வைத்திருந்தனர். இதனால் 5 ட்ரைகளை எதிரணி பக்கத்தில் வைத்த இலங்கை வீரர்கள் முதல் பாதியை 31:00 என கைப்பற்றி அசத்தினர்.

பின்னர் தொடர்ந்த 2ஆவது பாதியில் இலங்கை வீரர்கள் 2 ட்ரைகளையும் கஸ கஸ்தான் வீரர்கள் ஒரு ட்ரையையும் வைக்க இரண்டாம் பாதி ஆட்டம் விறுவிறுப்பாய் அமைந்தது. இருப்பினும் போட்டியின் முழு நேர ஆட்ட முடிவில் இலங்கை அணி 45:07 என்ற புள்ளிகள் வித்தியாசத்தில் மிக மிக இலகு வெற்றியைப் பதிவு செய்து ஆசிய ரக்பி ஆடவர் பிரிவு 1 சம்பியன்ஷிப் தொடரின் சம்பியன் மகுடத்தை வெற்றி கொண்டு அசத்தியது.

# லங்கா புட்போல் கப் - 2024 யாழ்ப்பாணமும் , கண்டியும் அரையிறுதியில் பலப்பரீட்சை




லங்கா புட்போல் கப் -2024 இன் முதல் காலிறுதிப் போட்டியில் களுத்தறை அணியை 3:2 என வீழ்த்திய யாழ்ப்பாணம் அணியும், நீர்கொழும்பு அணியை 9:0 என மண்டியிட வைத்த கண்டி அணியும் முதல் அரையிறுதிப் போட்டியில் மோதவுள்ளது.

லங்கா ஸ்போர்ட்ஸ் குரூப் இலங்கையில் உதைப்பந்தாட்ட விளையாட்டை மேம்படுத்தும் முயற்சியில் இலங்கை உதைப்பந்தாட்ட சங்கத்துடன் இணைந்து லங்கா லங்கா புட்போல் கப்- 2024 ஐ ஆரம்பித்துள்ளது. இதில் இலங்கை உதைப்பந்தாட்டத்தில் முன்னனி வகிக்கும் கழகங்களும், வீரர்களும் பங்கேற்கின்றனர். அதற்கமைய இதில் 8 அணிகள் போட்டியிடுகின்றன. இதற்கமைய விலகல் முறையில் அமைக்கப்பட்டுள்ள போட்டி அட்டவணையில் 4 காலிறுதி , இரு அரையிறுதி மற்றும் இறுதிப் போட்டி என்பன இடம்பெறவுள்ளது.

மேலும் இத் தொடரில் யாழ்ப்பாணம், கிழக்கு, கண்டி, கொழும்பு எப்.சி, காலி, களுத்துறை,மத்திய மாகாணம் மற்றும் நீர்கொழும்பு ஆகிய 8 அணிகளே பங்கேற்கின்றன. இதற்கு இலங்கையின் புகழ் பெற்ற 8 பயிற்றுவிப்பாளர்கள் ஒவ்வொரு அணியையும் பயிற்றுவிக்கின்றனர். அதற்கமைய ஹசன் ரூமி (கொழும்பு), ரமீஸ் ஹசன் (களுத்துறை), ஈ.பி. சன்னா (காலி), ரத்னம் ஜஸ்மின் (யாழ்ப்பாணம்), ரவ்மே மொஹிதீன் (மத்திய), மொஹமட் மொஹிதீன் (கிழக்கு), அஷ்பக் அஹமட் (கண்டி) மற்றும் சதுர குணரத்ன (நீர்கொழும்பு) ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர். இத் தொடரில் வெற்றி பெறும் அணிக்கு பரிசுத் தொகையாக 10 லட்சம் ரூபாய்களும், 2ஆம் இடம்பெறும் அணிக்கு 5 லட்சம் ரூபாய்களும் வழங்கப்படவுள்ளன.

அதற்கமைய நேற்றைய தினம் இடம்பெற்ற முதல் போட்டி பிற்பகல் 2 மணிக்கு கொழும்பு சிட்டி உதைப்பந்தாட்ட மைதானத்தில் களுத்துறை அணிக்கும், யாழ்ப்பாண அணிக்கும் இடையில் இடம்பெற்றது. இப்போட்டியின் முதல் பாதி 1:1 என சமநிலையில் நிறைவடைந்திருக்க இரண்டாவது பாதியில் யாழ்ப்பான அணி மேலதீகமாக 2 கோல்களை உட்செலுத்த, களுத்துறை அணி ஒரு கோலை மாத்திரம் உட்செலுத்தியது. இதனால் முழு நேர ஆட்ட முடிவில் 3:2 என்ற கோல்கள் அடிப்படையில் வெற்றி பெற்ற ரத்னம் ஜஸ்மின் அவர்களின் பயிற்றுவிப்பின் கீழுள்ள யாழ்ப்பான அணி அரையிறுதிக்கு முதல் அணியாகத் தகுதி பெற்றது.

பின்னர் 4 மணிக்கு இடம்பெற்ற தொடரின் 2ஆவது போட்டியில் பலமிக்க முற்றுமுழுதான இலங்கை தேசிய அணியின் வீரர்களை உள்ளடக்கிய கண்டி அணி, நீர்கொழும்பு அணியை எதிர்கொண்டது. கண்டி அணியின் ஆதக்கத்துடன் ஆரம்பித்த போட்டியின் முதல் பாதியில் பெனால்டி கோல் அடங்களாக 2:0 என முன்னிலை பெற்றது கண்டி அணி. பின்னர் இடம்பெற்ற 2ஆவது பாதி ஆட்டத்தில் கண்டி அணியின் முன்கள வீரர்கள் கோல் மழை பொழிந்து போட்டியை முழுமையாக ஆக்கிரமித்ததுடன் மேலதீகமாக 7 கோல்களை உட்செலுத்திக் கொள்ள முழு நேர ஆட்ட முடிவில் 9:0 என வெற்றி கொண்ட கண்டி அணி முதல் அரையிறுதிப் போட்டியில் எதிர்வரும் 11ஆம் திகதி யாழ்ப்பான அணியை எதிர்கொள்ளவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

மேலும் இன்றைய தினம் 2 போட்டிகள் இடம்பெறவுள்ள நிலையில் கிழக்கின் முதல் நிலை அணியான இளம் தாரகை அணியின் வீரர்களை உள்ளக்கிய கிழக்கு அணி இலங்கையின் பலமிக்க முன்னனிக் கழகமான கொழும்பு எப். சி கழகத்தை பிற்பகல் 2 மணிக்கு எதிர்த்தாடுகின்றது. அடுத்த போட்டியில் மத்திய மாகாண அணி , காலி அணியை பிற்பகல் 4 மணிக்கு எதிர்த்தாடவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இப் பத்திரிகையானது (மின்னிதழ்) Moon Media Network நிறுவனத்தினால் 41/2, விஜித வீதி, நதிமால, தெஹிவளை எனும் முகவரியில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.